# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 01 சனிக்கிழமை (14-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:139


# இருதரப்புகளின் யுத்தநிறுத்தத்தையும் நீடிப்பதற்கு நோர்வே தீவிர முயற்சி

## தூதர் வெஸ்பேர்க் மீண்டும் வன்னிக்கு

கொழும்பு,ஏப்ரல்14

**அரசுத் தரப்பும் விடுதலைப் புலிகளும் தற்சமயம் கடைப்பிடித்து வரும் யுத்தநிறுத்தத்தை மேலும் நீடிக்கச் செய்வதற்கான முயற்சியில் நோர்வே ஈடுபட்டிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியவந்தது.**

**யுத்தநிறுத்த நீடிப்பு மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை என்பன தொடர்பாக விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் மேலும் பேச்சு நடத்துவதற்காக கொழும்பில் உள்ள நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க் அடுத்த வார முற்பகுதியில் மீண்டும் வன்னிக்குச் செல்வார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

விடுதலைப் புலிகள் தாங்கள் ஒருதலைப்பட்சமாகக் கடைப்பிடித்து வரும் யுத்தநிறுத்தத்தை ஏற்கனவே மூன்று தடவைகள் நீடித்து விட்டனர். மூன்றாவது தவணைக் காலம் எதிர் வரும் 24ஆம் திகதி காலவதியடைய உள்ளது.

தமிழ் - சிங்களப் புத்தாண்டை ஒட்டி நல்லெண்ண நடவடிக்கையாக அரசுத்தரப்பு நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் யுத்தநிறுத்தத்தைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### நேரடிப் பேச்சுக்கு முன்பாக

## யுத்தநிறுத்தம், தடை நீக்கம் இரண்டையும் புலிகள் நிபந்தனையாக விதிக்கவில்லை

### நோர்வேத் தூதர் வெஸ்பேர்க் ஜனாதிபதிக்கு விளக்கம்

கொழும்பு,ஏப்.14

நேரடிப் பேச்சுக்கு முன்பாக தமது அமைப்பு மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டும் என்றோ யுத்தநிறுத்தத்தை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றோ நிபந்தனை எதையும் விடுதலைப் புலிகள் விதிக்கவில்லை என்று கொழும்பில் உள்ள நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க் இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளார்.

கொழும்புச் செய்தி வட்டாரங்கள் சில இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.

கடந்த வாரம் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனு

(11ஆம் பக்கம் பார்க்க)

### 'பட்ஜெட்' வாக்கெடுப்பு வேளையில்

## அரசைக் கவிழ்க்கும் ஐ.தே.கவின் திட்டம் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டதாம்!

கொழும்பு,ஏப்.14

அரசுக்கு எதிராக அடுத்த மாதத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர ஐ.தே.கட்சி ஏற்பாடுசெய்து வருகிறது.

வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு கடந்த புதன்கிழமை இடம்பெற்றவேளை அரசைக் கவிழ்க்க ஐ.தே.கட்சி திட்டமிட்டு அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்திருந்தது என்றும் -

எனினும் இலங்கை அரசமைப்பின் பிரகாரம் நிதி தொடர்பான பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால், மீண்டும் ஒரு பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டு வரமுடியும் என்றும் -

(11ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று தாக்குதல்கள் ஓய்வு; சோதனைகளில் மாற்றமில்லை

கொழும்பு,ஏப்.14

அரசுத் தரப்பினால் நேற்றுமுன்தினம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட யுத்தநிறுத்தத்தை அடுத்து நேற்று நாட்டில் எப்பகுதியிலும் தாக்குதல் நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலும் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் படையினரின் சுற்றிவளைப்புகளும் தேடுதல் நடவடிக்கைகளும் நேற்று இடம்பெறவில்லை என்று தகவல்கள் தெரிவித்தன. ஆனால் வீதிச் சோதனைகள், தடைமுகாம்களில் இடம்பெறும் வழமையான சோதனைகள் நேற்றும் இடம்பெற்றன.

குடாநாட்டில் வீதிச் சோதனைகள் நேற்று வழமைபோல் காணப்பட்டன. வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

வன்னிப் பகுதியில் படையினரின தன்னியக்க விமானம் ஒன்று தாழப் பறந்து அங்குள்ள மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4-5)

### நாளையும் உதயன்

நாளை ஞாயிற்றுக்கிழமை (15. 04. 2001) உதயன் வழமை போல் வெளிவருவான் என்பதனை வாசக நேயர்களுக்கு அறியத்தருகின்றோம்.

### எரிபொருள்களின் விலை உயரும்?

கொழும்பு,ஏப்.14

எரிபொருள்களின் விலைகளை அரசு விரைவில் அதிகரிக்கலாம் என்று கொழும்புச் செய்திவட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சர்வதேச நாணயநிதியம் இலங்கை அரசுக்கு வழங்கிய அறிவுறுத்தலின் பேரில் எரிபொருள்களுக்கான விலைகளை உயர்த்த அரசு முடிவுசெய்துள்ளது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை -

சர்வதேச நாணயநிதியத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப தொழிற்சட்டங்களும் மறுசீரமைக்கப்படவுள்ளன.


மகாதேவா ஜோதிடரின் புதுவருடப் பலன்கள் நாளைய உதயனில்!





## நேற்றிரவு ஆலயங்களில் புத்தாண்டு விசேட பூசை

யாழ்ப்பாணம்,ஏப்.14

நேற்றிரவு 9.27 மணிக்கு (பழைய நேரம்) புத்தாண்டு பிறந்த நேரத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளில் ஏராளமான பக்தர்கள் பங்குபற்றினர்.

புத்தாண்டு பிறந்த நேரம் ஆலயத்தின் சகல மணிகளும் ஒலித்தன. பக்திபூர்வமாக நிகழ்வுகள் இடம்பெற்றன. நகரையும் அதனை அண்டிய இடங்களிலும் இருந்து சுமார் 2 ஆயிரம் பக்தர்கள் புதுவருடப் பூசை வழிபாடுகளில் பங்குபற்றினர்.

யாழ்.நகரிலுள்ள ஏனைய பல ஆலயங்களிலும் நேற்றிரவு விசேட பூசை ஆராதனைகள் இடம்பெற்றன. புதுவருடம் பிறந்த வேளை ஆலய மணிகள் பல திசைகளிலிருந்தும் ஒலித்தன.

நகருக்கு வெளியேயும் ஆங்காங்கே ஆலயங்களில் மணிகள் ஒலித்தன. பூசைகள் இடம்பெற்றன.

நேற்றிரவு ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்ததால் வீதிகளில் மக்கள் நடமாட்டமும் காணப்பட்டது.(ஐ-3-10)

## பி.பி.ஸி.உலக தொலைக்காட்சியில் 'உதயன்' பற்றிய விவரணப் படம்

லண்டன்,ஏப்.14

'யுத்த முனையில் நெருக்கடிகளுக்கு மத்தியில் வெளியாகும் உதயன்' என்ற தலைப்பில் ஐந்து நிமிட நேர விவரணத் தொகுப்பு ஒன்றை பி.பி.ஸி. சர்வதேச தொலைக்காட்சிச் சேவை நேற்றுமுன்தினம் காலை மூன்று தடவைகள் ஒலிபரப்பியது.

'ஏசியா ருடே' என்ற நிகழ்ச்சியிலேயே இந்த விவரணத் தொகுப்பு ஒளிபரப்பப்பட்டது.

சர்வதேச ரீதியிலும் கொழும்பில் 'கேபிள்' இணைப்பு மூலம் சர்வதேச ஒளிபரப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளும் வசதி உள்ளவர்களும் 'டிஷ்' அன்ரனா வசதி உள்ளவர்களும் இந்த விவரணத் தொகுப்பைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசிச் சேவை சீராக இன்னும் 6 மாதங்கள் செல்லும்

### ரெலிகொம் அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.14

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான தொலைபேசிச் சேவையில் தற்சமயம் ஏற்பட்டுள்ள 'நெருக்கடி நிலைமை' சீராகுவதற்கு குறைந்தது ஆறு மாத காலம் செல்லும் என்று ரெலிகொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொலைபேசிச் சேவையில் நிலவும் 'நெருக்கடி நிலைமை' காரணமாக அவசர தேவைகளுக்குத் தொடர்பைப் பெறமுடியாது பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது விடயமாகக் கேட்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய நாடுகளுக்கு பாலசிங்கம் விஜயம்

கொழும்பு,ஏப்.14

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றை அடுத்த மூன்று தினங்களில் ஆரம்பிக்கவிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

அவர் எந்தெந்த நாடுகளுக்கு என்னென்ன திகதிகளில் செல்வார் என்ற விவரங்கள் வெளியிடப்படாதபோதும் அவரின் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை ஸ்ரீலங்கா இராணுவம் சந்தேகக் கண்கொண்டு நோக்குவதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

குதித்தோடி வருகின்ற புத்தாண்டே! மக்கள் வாழ்வில்
குதூகலத்தை அளிப்பாய் புத்தாண்டே! அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்....

# விஷ்ணு வீடியோவின்

## புதுவருட வாழ்த்துக்கள்!

VIDEO AUDIO

வாடிக்கையாளர்களே:-

உங்கள் இல்லங்களில் நடைபெறும் நிகழ்வுகளை சிறந்த முறையில் CD யில் பதிவு செய்துகொள்ளவும், பழைய, புதிய திரைப்படங்களை CD பிரதிகளில் பார்த்து மகிழவும், பதிவு செய்வதற்கும், சிறந்த முறையில் ஓடியோ பாடல்கள் ஒலிப்பதிவு செய்வதற்கும் (பழைய, புதிய பாடல்கள்) விரைந்து நாடுங்கள்.

உங்கள் ஆதரவுக்கு நன்றி.

(C/16310)

**விஷ்ணு வீடியோ** K.K.S. Rd., கோண்டாவில்.



# INFORMATION TECHNOLOGY PARK

## தகவல் தொழில்நுட்பப் பூங்கா

(272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) ✆ 021-3641

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

மலரும் இப்புத்தாண்டில் தமிழர் வாழ்வில் சுபீட்சமும், அமைதியும் நிலவ
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு
மாணவர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது
உளம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
பெருமகிழ்வடைகின்றோம்.

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப்பூங்காவின்
**தகவல் தொழில்நுட்பப் பயிற்சிப் பிரிவு**
இன்றிலிருந்து தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கின்றது.
ஏற்கனவே பதிவுசெய்து முதலாம் தவணைக்கட்டணத்தை செலுத்தியோர்
தமது பயிற்சி நெறிகளில் தரப்பட்ட நேர அட்டவணையின் பிரகாரம்
இணைந்துகொள்ளவும்.

குறிப்பு: Internet Cafe , Cyber Kids Memmbership ஆகியவற்றின் செயற்பாடுகள் ஆரம்பிக்கும் திகதி வெகுவிரைவில் அறியத்தரப்படும்.

பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர், முகாமையாளர்கள்,
உத்தியோகத்தர்கள்.


# முதலாம் ஆண்டு கீதாஞ்சலி

# நினைவலைகள்

மகிழ 12 . 05 . 1981



நெகிழ 14 . 04 . 2000

## செல்வி கீதா சுப்பிரமணியம்

(மாணவி- இந்துக் கல்லூரி - சாவகச்சேரி)

*திதி:02–05–2001 பூர்வ பட்ச தசமி*

ஐம்புலன்கள் வழி செல்லும் ஆசைகளை அடக்கி
அன்புயர அறிவுயர ஆற்றலுடன் நின்று
தென்புதரும் கடமையினைச் சீராகச் செய்து
வென்றிடுவாய் பயன் கருதாய் வேறென்ன வேண்டும்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
**அன்பு அப்பா, அம்மா, சகோதரர்,**
**சித்தாப்பா, சித்தி, மாமா, மாமி, உறவினர்கள்.**

நிரந்தர முகவரி: பெரியமாவடி, சங்கத்தானை, சாவகச்சேரி.
தற்காலிக முகவரி: துரையன் தோட்டம், நெல்லியடி, கரவெட்டி.

(C/16304)

**குறிப்பு:** *02.05.2001 புதன்கிழமை 10.30 மணிக்குச் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மகேஸ்வர பூசையிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.*

# *தென் இந்தியத் திருச்சபை யாழ் திருமண்டலம்*



## *"அவர் இங்கே இல்லை"*

உயிர்ப்புத் திருநாள் பஜனை

இடம்:- உடுவில் மகளிர் கல்லூரி.
காலம்:- 2001-04-15 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணி

*யாவரையும் இந்த உயிர்த்தெழுந்த சிறப்பு பஜனைக்கு அன்பாய் அழைக்கின்றோம்.*

தென் இந்தியத் திருச்சபை
யாழ். திருமண்டலம்.

(C/16313)


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# காயத்திரி நகைத் தொழிலகம், காயத்திரி வீடியோ விஷன்

## ஸ்தாபனத்தார்

அன்பர்கள், அபிமானிகள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மங்களகரமான
**சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்** தெரிவிப்பதில் மனமகிழ்ச்சி அடைகின்றார்கள்!



கனவில் மின்னிய தங்க நகைகள் நனவில் மின்னிப் பொலிந்திடவும்
உங்கள் அங்கங்களில் எங்கள் தங்கங்கள் ஒளிவீசிப் பிரகாசித்திடவும்
அசல் 22 கரட் தங்க நகைகளை நவீன டிசைன்களில் செய்திடவும்
குறித்த தவணையில் நாணயம் தவறாது புதிய நவீன பாணியில் விரும்பியபடி செய்துகொள்ள நாடுங்கள்

# காயத்திரி நகைத் தொழிலகம்

நினைவில் நிறைந்திருக்கும் பழைய ~ புதிய தமிழ் சினிமாப் படப்பிரதிகளை
CDயிலிருந்து நேரடியாகப் பதிவுசெய்த பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டியது

VC GAYATHTHIRI VIDEO VISION

# காயத்திரி வீடியோ விஷன்

உரிமையாளர்: தி.முரளிதரன்

~ 637, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் ~ (C/1622)



# நாகம்ஸ்

சுன்னாகம்

(B6572)

நாகமஸ் ஸ்தாபனத்தின்
புதுவருட நல் வாழ்த்துக்கள்!
**விஜய், சிம்ரன், விவேக்** நடித்த

## ப்ரியமானவளே

(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்)

# ராஜா யாழ்ப்பாணம்

இரசிகப்பெருமக்களுக்கு
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
*கார்த்திக், லைலா*
மற்றும் பலர் நடிப்பில்

## ரோஜாவனம்

காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)

# லக்ஷ்மி இணுவில்

**பிரசாந்த், சிம்ரன், கரண்** நடிப்பில்

## கண்ணெதிரே தோன்றினாள்

(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
விசேட காட்சி: மாலை 6.30, 9.30

# உதயன்

## நம்பிக்கையின் ஆரம்பம்

புதிய ஆண்டு ஒன்று புலர்ந்திருக்கிறது.

தனிப்பட்டவர்களின் வாழ்விலும், சமூகத்தின் வாழ்விலும், தேசத்தின் வாழ்விலும் மலர்ச்சியும் மங்களமும் மன அமைதியும் பிறக்கவேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

காலச் சக்கரம் சுழன்று வருடங்கள் கழிந்து செல்கின்றன. காலமாற்றம் மனிதனிடமும் மாற்றத்தைக் கொண்டு வருகிறது. ஆனால் ஈழத்தமிழர்களின் வாழ்வில் இன்னும் மாற்றம் வரவில்லை. இந் நாட்டின் ஆளப்படும் இனமாக, இரண்டாந்தரப் பிரசைகளாக, இராணுவ அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்ட மக்களாக அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட, பாதுகாப்பற்ற, இன்னல்கள், இழப்புகள் நிறைந்த துன்பமயமான வாழ்க்கையுடன் நாள்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள் தமிழர்கள். இந்த நிலையில் மாற்றம் வராதா? எப்போது வரும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள்.

தங்கள் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் — சொந்த மண்ணில் பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வாழ வகை செய்யும் சுயாட்சி அதிகாரம் கொண்ட— தீர்வொன்று கிடைக்காதா என்று காத்திருக்கிறார்கள், அதன் பொருட்டு அனுபவித்த — அனுபவிக்கின்ற —இன்னல்களும் இழப்புகளும் எண்ணற்றவை. அதனால் தொடர்வது இருள் சூழ்ந்த வாழ்வே.

இந்த இருளின் மத்தியில் விஷு வருடப்பிறப்போடு சிறிய ஒளிக்கீற்றுத் தென்படுகிறது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தனக்கு ஆர்வம் உண்டென்று கூறி வந்ததை அரசாங்கம் புத்தாண்டோடு சில சிறு சமிக்ஞைகள் மூலம் ஊர்ஜிதப்படுத்தி உள்ளது.

இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நிறையவும் ஆர்வமும் விருப்பமும் உண்டென்று —

சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நீண்ட காலச் செய்முறையாக இருக்கும் என்றும் பல கண்டங்களைத் தாண்ட வேண்டி இருக்கும் என்றும் கூறும் சொல்ஹெய்ம் —

தன்னால் இது விடயத்தில் நல்ல பெறுபேறுகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கையுடனேயே இந்த விவகாரத்தில் காலடி வைத்ததாகவும் சொல்கிறார்.

அரசாங்கம் தனது நல்லெண்ண அறிகுறியாக அறிவித்துள்ள ஐந்துநாள் (தற்காலிக) தாக்குதல் நிறுத்தம், நிரந்தர போர் நிறுத்தமாக மாறக்கூடிய சாத்தியம் இருப்பதாக அரச தரப்பிலிருந்து நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுளது.

மனிதனின் வாழ்வே நம்பிக்கையைத் தான் அடிநாதமாகக் கொண்டுள்ளது. வாழ்வின் ஏனைய துறைகளில் மட்டுமன்றி அரசியல் துறையிலும் நம்பிக்கை தேவை. நம்பிக்கை இன்மை, புரிந்துணர்வு இன்மை, சகிப்புத் தன்மை இன்மை, இனத்துரோகம் ஆகியனவே இனப்பிரச்சினையின் வேர்கள்.

புத்தாண்டோடு இலங்கையின் அரசியல் வானில் நம்பிக்கைக் கீற்றுக்கள் பளிச்சிடுகின்றன. அவை நாட்டுக்கு நலன்தரும் பேரொளியாக விரிவுறவேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும். நன்றே செய்க; நலமே விளையும். புத்தாண்டு அதன் ஆரம்பமாகட்டும்!

# உயிர்த்தகிறிஸ்துவின் அடையாளமாக பயன்படுத்தப்படும் பாஸ்கா திரி

## புதுவாழ்வைப் பெற புனித சனி எமக்கு அழைப்பு

அருட்சகோதரன் எஸ். ஏ. றொஷான்

பாவத்தையும் சாவையும் அழித்து, இயேசு வெற்றி வீரராக உயிர்த்தெழுந்தார். நம்மைப் பொய்மையிலிருந்து மெய்மைக்கும், இருளினின்று ஒளிக்கும், சாவினின்று வாழ்வுக்கும் அவர் அழைத்துச் செல்கின்றார். இதுவே நம்முடைய பாஸ்கா, நம்முடைய கடந்து செல்லுதல் இப் புனிதமான இந்த இரவில் இந்த மாபெரும் மறை நிகழ்ச்சியை நாம் நினைவு கூர்கிறோம். இதைப் பக்தியுடன் கொண்டாடிக் கிறிஸ்துவின் புது வாழ்வைப்பெற இன்றைய புனித சனி எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

பாலைவனத்தில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் நெருப்புத் தூணாய் ஒளி கொடுத்தார். பாவ இருள் நடுவே வாழும்நமக்கு, கிறிஸ்து அருள் ஒளியாய்த் திகழ்கின்றார். உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமாக இன்றைய வழிபாட்டில் பாஸ்கா திரி பயன்படுகின்றது. நமது மீட்பின் தொடக்கமும் முடிவும் கிறிஸ்துவே என்பதைக் காட்ட மொழியின் முதல் எழுத்தாகிய "அல்பா" வும் கடைசி எழுத்தாகிய "ஓமேக்கா" வும் எழுதப்படுகின்றன.

எல்லாக் காலமும் நேரமும் இயேசுவுக்கே உரியது என்பதைக் காட்ட நடப்பு ஆண்டு எழுதப்படுகின்றது. பாஸ்கா திரியில் பதிக்கப்படும் ஐந்து சாம்பிராணி மணிகள் கிறிஸ்துவின் ஐந்து மகிமைகளான காயங்களைக் குறிக்கின்றன. சுடர்விட்டு எரியும் பாஸ்காதிரி கிறிஸ்துவை சுட்டிக்காட்டுகின்றது.

கிறிஸ்துவே உலகின் ஒளி. அந்த ஒளியே நமது வாழ்வின் வழித்துணை. பேறாயாம் கிறிஸ்துவைப் பின் பற்றும் நாம் இருள் சூழ்ந்த இவ்வுலக வாழ்வில் பிறருக்கு கிறிஸ்துவை போல் ஒளி கொடுத்து வாழ வேண்டும் என்பதை இன்றைய நாளில் கிறிஸ்தவர்களாகிய நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ★

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 14

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு மூலவர் அபிஷேகமும் 8.30 மணிக்கு ஸ்ரீ ரங்கநாதர் அபிஷேகமும் நடைபெறும். தொடர்ந்து 10.30 மணிக்கு வருடப்பிறப்புத் திருவிழாவும் நடைபெறும்.

(ம)

★ ★ ★

காரைநகர் ஏப் 14

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர்ஆலயவருடாந்த தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமைமதியம் 1-00 மணிக்கு நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை6-30மணிக்குவியாவில் ஐயனார்த் ஆலய தீர்த்தக் கரையில் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

(க-73)

# இடப்பரப்புக்கு ஏற்ற வகையில் ப.நோ.கூ.சங்கம் விஸ்தரிக்கப்படும்

## கூட்டுறவு உதவி ஆணையாளர் தகவல்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இடப்பரப்புக்கு ஏற்ப விரைவில் பிரிக்கப்பட உள்ளன. இதன்படி இப்போதுள்ள சங்கங்கள் இரண்டாகவோ அதற்குமேற்பட்டனவாகவோ பிரிக்கப்படும்.

வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு சண்முகநாதன் மேற் கண்டவாறு கூறினார்.

அ. த. க. கிருஷ்ணராசா தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:—

ஜனாதிபதி ஆணைக்குழு சங்கங்களை இடப்பரப்புக்கு ஏற்பப் பிரிக்கும் படி சிபார்சு செய்துள்ளதாகத் தெரிகிறது. இக் குழுவின் சிபார்சு அங்கீகரிக்கப் பட்டதும் அது செயற்படுத்தப்படும்.

"தவறு செய்யும் பணியாளர்கள் தண்டிக்கப்படும் போது ஒரே நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். இச் சங்கத்தில் பாரபட்சம் காட்டப்படுவது எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது. பெரிய குற்றம் செய்தவர்களுக்குச் சிறு தண்டனையும் சிறு குற்றம் செய்தவர்களுக்குப் பெரும் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது இன்று பொறுப்பு ஏற்கவிருக்கும் புதிய நிர்வாகம் இதில் கவனம் செலுத்த வேண்டும்" என்றார்.

தலைவர் அ. த. க கிருஷ்ணராசா தமதுரையில்:-

"எமது சங்கத்துக்குத் தேவையான லொறி ஒன்றுக்கு அடிச்சட்டத்தைப் பெறுவதற்கு கூ. அ. உ. ஆணையாளர் உதவி புரிந்துள்ளார். இன்னும் பல சேவைகளை அவர் கடந்த காலத்தில் இச் சங்கத்திற்கு ஆற்றியுள்ளார். அதற்காகச் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

ஏழு உறுப்பினர்களைக் கொண்ட புதிய பணிப்பாளர் சபையும் தெரிவு செய்யப்பட்டது. (க-154)

## புத்தாண்டு தின ஒலிபரப்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையிலும் யாழ். சேவையிலும் புத்தாண்டு விசேட நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிமுதல் நேரடி அஞ்சல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒலி பரப்பில் மதுர கவி காரை எம். பி. அருளானந்தனின் தலைமையில் "புதுயுகம் படைக்கும் புத்தாண்டே எழுந்து வருக" என்னும் தலைப்பில் கவியரங்கமும் விசேட சமய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(க)

## அம்புலன்ஸ் சேவை

யாழ். வை. எம் சி. ஏ. அம்புலன்ஸ் சேவையை ஆரம்பித்து நடத்திவருவதாக அதன் தலைவர் டீ. ஆர். அருமைநாயகம் தெரிவித்தார்.

இதற்குக் குறைந்த கட்டணமே அறவிடப்பட்டு வருவதாகவும் இச்சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் வை. எம். சி ஏயுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

**உதயவாக்கு**

எப்படிக் கேட்க வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்; மோசமாய்ப் பேசுபவர்களிடமிருந்தும் நீ நன்மையடைய முடியும்.

## நாளை

சித்திரை 02

ஞாயிற்றுக்கிழமை

திதி: ஸப்தமி

முற்பகல்: 10. 07 வரை.

நட்சத்திரம்: பூராடம்

நண்பகல் 12. 25 வரை.

சுபநேரம்: 9.04—10.34

ராகுகாலம்: 4.34 -6.04

(பழைய நேரப்படி)

# கைதடிக்கு கண்டி வீதியூடாக மீண்டும் இன்று முதல் பஸ் சேவை

யாழ்ப்பாணம் ஏப். 14

யாழ். கண்டி வீதி ஊடாக நாவற்குழி, கைதடிப் பகுதிகளுக்கான பஸ் சேவை புத்தாண்டு தினமான இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகின்றது.

இன்று காலை 7.30மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளதாக ஈ. பி. டி. பி அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளர் கே. மணி பல்லவராஜன், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் மற்றும் 52 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் செனவிர ஆகியோர் கலந்து கொள்வர் எனவும் —

ஆரம்பத்தில் தினசரி இரண்டு சேவைகளே இடம் பெறும் எனவும் — பின்னர் பொதுமக்களுடைய ஆதரவைப் பொறுத்து சேவை நீடிப்புப் பற்றி அறிவிக்கப்படும் எனவும் —

அந்த அமைப்பு அறிவித்துள்ளது. (க-7)

## சங்கத்தை இயக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 14

இனந்தெரியாத சிலரின் அச்சுறுத்தலினால் மூடப்பட்டிருந்த மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இன்று முதல் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சங்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் நேற்று நண்பகல் 12-30 மணிக்கு வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந திரிலோகநாதனைச் சந்தித்து சங்கத்தினை இயக்குவதற்கு உதவுமாறுகோரிக்கை விடுத்தனர்.

தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரதேச சபைத் தலைவர் இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்புகொண்டு உரிய ஒழுங்குகளைச் செய்து தருவதாகவும் சங்கத்தினை உடனடியாகத் திறக்குமாறும் தெரிவித்தார்.

(ஐ-5-6)

## சங்கீத சபைப் பரீட்சை

வலி வடக்கு, ஏப். 14

வட. இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படும் பரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சை யாழ். மாவட்டத்திலும் வெளி மாவட்டங்களிலும நடைபெறுகின்றது.

(ஐ-86)

## ஆசிரியர் செயலமர்வு

சுழிபுரம், ஏப். 14

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தரம் மூன்று வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் இரண்டு தினங்களுக்கு சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளன.

இரு தினங்களும் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 4-30 மணி வரை இந்தச் செயலமர்வு நடைபெறும்.

சகல ஆசிரியர்களும் இந்தச் செயலமர்வுகளில் தவறாது கலந்துகொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7-28)

## கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா

யாழ்ப்பாணம் ஏப் 14

கத்தோலிக்கர்களின் பெருவிழாவான கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை முன்னிட்டு இன்று இரவு 11-00 மணிக்கு யாழ். பேராலயத்தில் திருவிழிப்புப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

நாளை உயிர்த்த ஞாயிறு காலை 5-30 மணிக்கு முதலாவது திருப்பலியும் 6-30 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் இரண்டாவது திருப்பலியும் காலை 8-15 மணிக்கு மூன்றாவது திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும் என்று யாழ். பேராலய பங்குத் தந்தை தெரிவித்தார்.

(ஐ-6)

## மானி நகர் அமர் விநாயகரே!

கனிபெற்று கனஞானம் கண்டிட்ட திருவே
நனி மானி நகர் அமர்ந்த நல் விநாயகரே
வினை தீர்க்க விரைந்தோடி விழைகின்ற நேசா
இனி எங்கள் இடர்தீர்த்து இதம் தாரும் ஐயா!

-மானியூர் ரட்ணேஸ்

(இன்று மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா)

## புதுவருட வாழ்த்துக்கள்

**சாந்தினி** தொலைத் தொடர்பு சேவையினர்

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் தமது மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றனர்.

LOCAL — 021 — 3390
LOCAL — 021 — 3633
IDD. No. — 0094 - 21 — 3390
IDD No. — 0094 - 21 — 3633

உரிமையாளர்
P. நாகநாதன்

K. K. S. வீதி, ஆஸ்பத்திரிக்கு முன்பாக,
இணுவில். (86564)



## இளங்கலைஞர் மன்றம்
நல்லூர்

## புத்தாண்டு இசை நிகழ்ச்சி

காலம்: 15 - 04 - 2001 ஞாயிற்றுக்கிழமை
இடம்: மன்ற கலா மண்டபம்
இசை அரங்கு: பி.ப. 4.00 தொடக்கம் 4.40 வரை

செல்வி கல்யாணி ஸ்ரீரங்கநாதன்: பாட்டு
செல்வன் ம. ரதீஸ்குமார்: வயலின்
செல்வன் க. கஜன்: மிருதங்கம்

**வாத்திய சங்கமம் பி.ப. 4.40 முதல் 5.30 வரை**

வயலின்: ம. ரதீஸ்குமார்
கிபோட்: த. றொபேட்
மிருதங்கம்: க. கஜன்
முகர்சிங்: வ. ரமணன்
ஒக்ரோபாட்: அ. டேநீஸ்

**இசை அரங்கு பி.ப. 5.30 முதல் 6.30 வரை**

சங்கீதபூஷணம் ஐ. வேலாயுதபிள்ளை: பாட்டு
திரு. எஸ். துரைராசா: மிருதங்கம்
திரு. ஆர். குகபரன்: வயலின்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

மன்றத்தினர்.
சட்டநாதர் வீதி, நல்லூர். (86589)


## இன்று அத்தியடிப் பிள்ளையார் தேர்

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ். அத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா புதுவருட தினமான இன்று காலை 9 மணிக்கு நடைபெறுகிறது.

காலை 7.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 8.30 மணிக்கு விநாயகப்பெருமான் தேருக்கு எழுந்தருளுவார். அதனைத் தொடர்ந்து 9 மணிக்கு தேர்ப்பவனி ஆரம்பமாகும்

அத்துடன்மாலை6மணிக்கு ஆசிரியர் இரா. செல்வவடிவேலைக் கௌரவிக்கும் நிகழ்வும் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஆலய உற்சவகாலத்தில் பெரியபுராணப் பேருரை நிகழ்த்தியதையொட்டி பொன்னாடை போர்த்து இவர் கௌரவிக்கப்படவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, ஓய்வுபெற்ற நீதிபதிமு.திருநாவுக்கரசு, ஆலயத் தலைவர் து. கனகசபை ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்குவர்.

(க-10)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14

ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் இன்றும் நாளையும் நடத்தப்படவிருந்த மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி, மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், இன்னிசை நிகழ்ச்சி ஆகியன பிற்போடப்பட்டுள்ளதாக நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(க-10)


## உயிர்த்தெழுந்த தேவனுக்குப் பாமாலை

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வழங்கும்

**உயிர்த்தெழுந்த திருநாள் பஜனை**

இடம்: பரி. யோவான் ஆலயம், சுண்டிக்குளி,
காலம்: ஞாயிற்றுக்கிழமை, 15-04-2001
நேரம்: பி.ப 4.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம். (சி/16301)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை அதிபர்

**திரு. க. நடராசா** அவர்கள்
(Sc. Tp Tr, S.L.P.S. ii)

அதிபர் சேவை தரம் ii இற்கு பதவி உயர்வு பெற்றமையிட்டு அவரை பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

மேற்படி, பாடசாலை
(86586) ஆசிரியர்களும் மாணவர்களும்.



அனைவருக்கும் எமது

## புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

★ கோல்ட் கவறிங் நகைகள்
★ அழகு சாதனப் பொருள்கள்
★ தலைச் சோடனை செற்றுகள்

யாவும் நிதான விலையில் பெற்றிட உங்கள் வனப்பு மிகு வடிவத்தின் வரலாற்றுப் பொக்கிஷம்

## சிவராகினி அழகு மாடம்

159, மின்சார நிலைய வீதி, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

(சி-16199)



## நியூ இந்திரன் ஜுவல்லர்ஸ்

213A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(ராஜா சினிமா அருகில்)

பூத்திருக்கும் புத்தாண்டில் தமிழ்மக்கள் அனைவரின் வாழ்விலும் அன்பும் அமைதியும் நிறைந்திட, இறைமருள் வேண்டி, எமது மனமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.

**இந்திரன் ஜுவல்லர்ஸ்**
சாவகச்சேரி.

**நியூ இந்திரன் ஜுவல்லர்ஸ்**
213A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(86602)



அனைவருக்கும்

## எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

மனை இழந்து, இடம்பெயர்ந்து, இன்னல்கள் பல சுமந்து துன்பத்தின் சிகரத்தில் வாழும் தமிழ் மக்கள் வாழ்வில் துயர் அகன்று துன்பம் விலகி இன்புற்று வாழ புத்தாண்டே நீ புது வாழ்வு படைக்க வந்திடுவாய்!

## பவானி விலாஸ்

[கச்சான் அலுவா தொழிலகம்]

தரமான தயாரிப்பால் உயர்ந்து நிற்கும்

**பவானி விலாஸ் உற்பத்திகளை**

யாழ். நகர்-ஆஸ்பத்திரி வீதியில் ★ றெட்ணம் பார்மஸி ★ குபேரன் களஞ்சியம் ★ சரவணா றேடர்ஸ் ★ ஐங்கரன் ★ கனகசுந்தரம் ★ சிறீசக்தி றேடர்ஸ் ★ சிவகுமார் ★ திருச்செல்வம் வடமராட்சியில் ★ கோபுரம்ஸ் நெல்லியடி

ஆகிய நிறுவனங்களில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மணிக்குரல் விளம்பர சேவையின் 28 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நாளை (15—04—2001) ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் சிறப்புற எமது இதயம் நிறைந்த நல் வாழ்த்துக்கள்!

## பவானி விலாஸ்

32/1, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

தொ. பே. 3138 (86630) உரிமையாளர்:- S. தனராஜா



சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் திருக்கோயில்



'பற்றறுத்தோர் சுற்றமென பழநியமர் வேலவனை நற் தென்மராட்சி வைத் தோம்காப்பு'

**புத்தாண்டில் புதுத் தெம்புடன் வாழ வழிவிட்டு அருள்புரிவாயாகுக!**

தினந்தோறும் தன்னை வழிபடும் அடியார்களுக்கு நித்தியமும் அருள்புரிந்து, ஆடிமாதத்தில் வரும் வேல பவனி விழாவில் சிறப்பாகப் பவனிவந்து அபயமளிக்கும் ஸ்ரீ பழநி ஆண்டவர் இன்று அடியார்களின் ''முருகா முருகா'' என்ற நாமத்தை அருகிருந்து கேட்காது பூஜை, அபிஷேகம், ஆராதனை எதுவுமின்றி தூரத்தே வீற்றிருக்கிறார்.

சொல்லொணாத் துன்பத்தின் மத்தியில் இடம்பெயர்ந்து வசிக்கும் அனைத்து பழநி ஆண்டவர் அடியார்களும் பழநிஆண்டவரை நெஞ்சுருகி நினைத்து இப்புத்தாண்டு தொடக்கம் எமக்கு புதுத்தெம்புடன் வாழ வழிகாட்டிக் காத்தருள வேண்டுமென்று இறைஞ்சுவோமாக. உன் பதியருகே வந்து நாம் குடியமர்ந்து நின்னை வணங்க அருள் கடாட்சம் வழங்குவாய்!

தென்மராட்சியில் இடம்பெயர்வுக்கு உட்பட்ட அனைத்து மக்களும் தமது சொந்த இடங்களுக்கு விரைவில் மீளக் குடியமர்ந்து இடர் எதுவுமின்றி சுகத்துடன் வாழ, உன் அருகில் வீற்றிருந்து அருள் புரியும் செருக்கன் ஸ்ரீ சித்தி விநாயகரின் துணைகொண்டு வீரவேல் கையேந்திக் காத்தருள வேண்டுமென நாம் பிரார்த்தனை செய்கின்றோம்.

பரிபாலன சபை
அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலயம்
டச்சு வீதி, சாவகச்சேரி.

(சி/16306)

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ் - விஷு வருடம்

# கல்வியின் ஆன்மீக அம்சத்தை மாணவருக்கு உணர்த்த வேண்டும்

**25.09.2000 இல் பிரசாந்தி நிலையத்தில் நடந்த உலகக் கல்வியாளர் மாநாட்டில் மனிதகுலத்திற்கு செய்ய வேண்டிய சேவைப்பணிகளையும், மனித உயர் குணநலன்களின் மேம்பாட்டின் அவசியத்தையும் வலியுறுத்தி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா வழங்கிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது.**

**அதன் முதலாவது பகுதி வெளியாகிறது. மிகுதி இரண்டு பகுதிகளும் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.**

நவீனகல்விமுறை புத்தியை மட்டுமே வளர்க்கிறது; நற்குணங்களை அல்ல. மனிதனிடம் நற்குணங்களை வளர்க்காத கல்வியினால் என்ன பயன்?

### பிரபஞ்சம்

'பிரபஞ்சம்'(உலகம்) என்பது ஐந்து வகை மூலப்பொருள்களான பூமி, தண்ணீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் ஆகியவற்றின் வெளிப்பாடு. இந்த பஞ்சபூதங்களை தெய்வீகத்தின் அம்சங்களாகவே மக்கள் வழிபட்டு வந்திருக்கின்றனர். பூமியைப் பூமாதேவி எனவும், காற்றை வாயுதேவன் எனவும், நீரைக் கங்காதேவி எனவும், நெருப்பை அக்கினி தேவன் எனவும், ஆகாயத்தை ஸப்தப்பிரம்மம் எனவும் அழைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர்.

### பஞ்சபூதங்கள்

ஆனால் தெய்வீக இயல்பான இந்தப் பஞ்சபூதங்களின் முக்கியத்துவத



தைப்பற்றி, மாணவர்களும் புரிந்து கொள்ள அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. ஆசிரியர்களும் அவற்றை அவர்களுக்கு விளங்குமாறு எடுத்துக் கூறுவதில்லை.

மாணவர்கள் வெறும் புத்தக அறிவை வளர்த்துக்கொள்வதில் ஆர்வமாக இருக்கிறார்களே தவிர, பஞ்சபூதங்களின் புனிதத்தை உணர்ந்து கொள்வதில் அந்த ஆர்வத்தினைக் காட்டுவதில்லை.

உண்மையான கல்வி என்பது நற்குணங்களை வளர்ப்பதும், நல்ல புத்தியை உருவாக்குவதும் பக்தி, கடமை, ஒழுக்கம் ஆகியவற்றை மாணவனிடத்தில் ஏற்படுத்துவதும்தான். இன்றைய ஆசிரியர்கள் புத்தக அறிவை மாணவர்களிடத்தில் உருவாக்குகிறார்களே தவிர, கல்வியின் ஆன்மீக அம்சத்தைப்பற்றி விளக்குவதில்லை.

இன்று பஞ்சபூதங்களும் மாசுபட்டுப் போயிருக்கின்றன. அதனால் மக்கள் தமது வாழ்வில் அமைதியின்மையையும், பாதுகாப்பற்ற தன்மையையும் உணருகிறார்கள்.

**தொகுப்பு:-**
**கரன்**

இன்றைய தேவை, மாணவர்கள் வெறும் பட்டங்களை வாங்கிக் குவிப்பதில்லை. அவர்கள் பஞ்சபூதங்களைச் சரிவரப் பயன்படுத்தப் பயில வேண்டும். இன்றைய உலகம் வேண்டுவது, இத்தகைய குணநலன்கள் இணைந்த கல்வி முறையைத்தான்! குணநலன்கள் கல்வியினால் பெறப்படவேண்டும்.

கல்வி என்பது வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும்! வாழ்க்கை என்பது அன்பு; அன்பு என்பது மனிதன்: மனிதன் என்பவன் ஆன்மீகத்துக்காக; ஆன்மீகம் என்பது உலகிற்காக; உலகம் என்பது அமைதிக்காக என அமைய வேண்டும். இன்று மாணவர்கள் கல்வியறிவைப் பெறுவது சுயநல நோக்கத்துடன்தான்; மனம் முழுவதும் சுயநலம் மேலோங்கி நிற்கிறது. பணத்துக்காக அவர்கள் ஏங்குகிறார்கள்.

**'Money Comes and goes but Morality Comes and grows'**

பணம் வந்து போகக்கூடியது: ஆனால் ஒழுக்கமும் நேர்மையும் வந்து வளரக்கூடியது.

### நேர்மை

மாணவர்கள் நேர்மையை வளர்த்துக்கொள்ள கடுமையான முயற்சி எடுக்க வேண்டும். அவர்கள் புத்தியைத் திறமையாக உருவாக்க வழிவகை செய்யவேண்டுமேயல்லாது, புத்தியைத் தீயவழியில் செலுத்தக் கூடாது. அப்போதுதான் அவர்கள் வாழ்வில் சமநிலை நிலவும்.

ஆனால் நவீன மாணவர்கள் தங்கள் புத்தியைக் கொன்று விடுகிறார்கள். அதாவது புத்தியைத் தவறான வழியில் செலுத்துகிறார்கள். அதன் விளைவாக அவர்களது மனதின் சக்தி காணாமல் போய்விடுகிறது. அவர்களது உட்புறத்தில் விளங்கும் தெய்வீகம் அடங்கிப்போய்விடுகிறது.

தங்களது புத்தியிலிருந்து திறமையை உருவாக்கிக் கொள்பவர்களால் மட்டுமே, வாழ்க்கையில் சமநிலை பெறமுடியும். உட்புறப்பார்வை என்கிற, தன்னுள் இருக்கும் உண்மையைப் புரிந்து கொள்ளவும் அத்திறமை உதவுகிறது.

*(இரண்டாவது பகுதி நாளை)*

## வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரின் செய்தி

யாழ்ப்பாணம்,ஏப்.14

தமிழர்கள் அனுபவித்துவரும் ஆற்றொணாத் துயரங்களுக்கு இப் புத்தாண்டு முற்றுப்புள்ளி வைக்கட்டும்.

வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் வலி.மேற்கு இந்து ஆலயங்களின் மகாசபைத் தலைவருமான ந.திரிலோகநாதன் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது செய்தி வருமாறு:-

சித்திரைப் புத்தாண்டு இன்று மலாகின்றது. அமைதியும், சமாதானமும், சுபீட்சமும் தமிழ் மக்கள் வாழ்வில் மலருமா? என எண்ணற்ற எதிர்பார்ப்புக்களுடன் எம் மக்கள் ஏங்கி நிற்கின்றனர்.

வடக்கிலும் தெற்கிலும் சமாதானத்தின் தேவை உணரப்பட்டு வருகிறது. அதிலும் தமிழ்மக்கள் படும் ஆற்றொணாத்துயருங்களுக்கு இப் புத்தாண்டு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே யாவரதும் விருப்பமாகும். சென்ற இரு தசாப்த காலமாக எம்மக்கள் பட்டு வரும் துன்ப துயரங்களுக்கு எல்லை இல்லை.

இன்று மக்களோடு மக்களாக நின்று அவர் துயர்துடைப்பதில் எமது ஈ.பி.டி.பி.கட்சி அரும்பணியாற்றி வருகிறது. இயன்றவரை தன்னாலானதை செய்து மக்கள் இன்னல் நீங்க பாடுபட்டு வருகிறது.

ஆயிரம் வீடுகள் அகதிகளுக்கு அமைத்தல், நிவாரணம் பெற்றுத் தருதல், வேலைவாய்ப்புக்கள், போக்குவரத்து வசதிகள், அன்றாடத் தேவைகளை முன்னிட்டு எழும் பிரச்சினைகள் எனப் பல்வேறு வகைகளில் மக்களுக்குப் பணிபுரிந்து வருகின்றது. யதார்த்த நிலையைப் புரிந்து மக்கள் மனதில் ஏமாற்றத்தை விதைக்காமல் நம்பிக்கையூட்டும் வகையில் செயலாற்றி வருகிறது.

இன்று போரினாலும், மதம் பிடித்த மதவிரும்பிகளாலும் எமது சைவ ஆலயங்கள் சிதைவுற்றும், அழிக்கப்பட்டும் உள்ளன. இவற்றைப் புனருத்தாரணம் செய்வதிலும், புதிதாக நிர்மாணிப்பதிலும் எமது கட்சி ஈடுபட்டு வருகின்றது. ஆகமங்களில் கூறப்பட்ட முறைப்படி பூசைகள நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆன்ம ஈடேற்றப் பணிகள் தொடர்கின்றன.

எனவே, பாரதி கூறியது போல் எமது கடமையே பெரிது, காலமோ குறுகியது என்பதை உணர்ந்தவர்களாய் சரியான வழியிலே விரைந்து செயற்படுவோம். இழந்துவிட்ட யாவையும் பெற்றுத் தமிழ் மக்கள் நாம் எனத் தரணி போற்றப் பாடுபடுவோம்.

புதிய இப்புத்தாண்டு, சென்ற பல புத்தாண்டுகள் போலில்லாமல், அல்லல்பட்டு ஆற்றாது, ஏக்கப் பெருமூச்சுடன் வாழும் எம்மக்கள் வாழ்வில் அமைதியும், சுபீட்சமும், சுதந்திரமும் தரும் ஆண்டாக விளங்க இறைவனடி பணிவோம் - என்று உள்ளது.

(ஐ)

## இந்து மாமன்றம் புத்தாண்டுச் செய்தி

கொழும்பு,ஏப்.14

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் அரசியல் தீர்வு முன்வைக்கப்படுதல் வேண்டும். இதனையே புத்தாண்டில் தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த நாட்டில் சமாதானத்தை உருவாக்குமுகமாக அரசாங்கம் இந்தப் புதுவருடப்பிறப்பிலாவது ஒரு யுத்த நிறுத்தத்துக்கு உடன்பட்டு புலிகளுடனும் ஏனைய கட்சிகளுடனும் ஓர் அர்த்த புஷ்டியான பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்க வேண்டும்.

வடக்குக் கிழக்கின் சகல பகுதிகளுக்கும் உணவு, மருந்து வகை, பாடசாலை மாணவருக்கான உபகரணங்கள், கட்டடப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் எவ்வித தடைகளும் இன்றிக் கிடைக்க வழிவகுக்கப்பட வேண்டும்.

தமிழ்பேசும் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் பெரும்பாலான சிங்கள மக்களுக்குத் தெரியாது. அவர்களும் சர்வதேச சமூகமும் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளையும், துன்பங்களையும், அவமானங்களையும் விளங்கிக்கொண்டு, அரசாங்கத்தையும் மற்றும் ஏனையோரையும் இராணுவ நடவடிக்கையை நிறுத்தும்படியும், பாதுகாப்பு நடவடிக்கை என்ற போர்வையில் விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதரத்தடையை நீக்கி, ஒரு நீதியான அரசியல் தீர்வுக்கு உடன் படுமாறும் தூண்ட வேண்டும்.

- என்று அதில் உள்ளது.(க-7)

## இந்து சமயப் பேரவை செய்தி

யாழ்ப்பாணம்,ஏப்.14

தமிழ் சிங்களப் புத்தாண்டில் நாட்டில் போர் ஓய்ந்து சமாதானம் ஏற்பட திரிகரணசுத்தியோடு அனைவரும் செயற்படுவோம்.

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை சித்திரைப் புத்தாண்டை ஒட்டி விடுத்துள்ள செய்தியில் இப்படித் தெரிவித்துள்ளது.

மாபெரும் அழிவுகளையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தியுள்ள யுத்தம் முடிவுக்கு வந்து நாட்டில் சமாதானம் ஏற்பட நோர்வே அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சி வெற்றியளிக்க வேண்டும் என்பதே அனைத்து மக்களின் பெருவிருப்பாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே நடைபெறவுள்ள சமாதானப்பேச்சு வெற்றிபெற எல்லாம் வல்ல ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம் - என்று இந்து சமயப் பேரவை தெரிவித்துள்ளது. (ஐ)

# புத்தாண்டு வாழ்த்துச் செய்திகள்

## அமைச்சர் டக்ளஸ் புத்தாண்டுச் செய்தி

யாழ்ப்பாணம்,ஏப்.14

இயல்பு நிலை திரும்பவும், தற்போதைய அமைதி நிலை நீடிக்கவும், உறுதியான அரசியல் சூழல் உருவாகவும் புத்தாண்டு வழிகாட்டட்டும்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது புத்தாண்டுச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் - சிங்கள புதுவருடத்தைக் கொண்டாடும் உள்ளங்களுடன் எமது மகிழ்சியையும் பகிர்ந்து கொள்கின்றோம். இனங்களுக்கு இடையிலான பரஸ்பர புரிந்துணர்வு, ஒற்றுமை என்பதை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகளில் தமிழ் சிங்கள புத்தாண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

இம்முறை புத்தாண்டு காலத்தை முன்னிட்டு யுத்தநிறுத்தப் பிரகடனத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளமை அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டும் என்பதில் ஐயமில்லை. துப்பாக்கிகளும் வெடிகுண்டுகளும் மௌனித்துப் போகும் நிலைமையானது மக்களுக்கு சந்தோசமானது என்பதில் சந்தேகம் இல்லை. எனவேதான் தற்போதைய அமைதிநிலை நீடித்து நிரந்தரமானதாக வேண்டுமென விரும்புகின்றோம். இதற்கு ஏதுவாக இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய ஆரோக்கியமான அரசியல் பேச்சுக்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்போடும் முன்னெடுக்கப்பட்டு அர்த்த பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே இப்புத்தாண்டில் எமது எதிர்பார்ப்பாகும்.

எனினும் தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக அரசியல் உரிமை வெளிப்பாடுகள் நிலை நிறுத்தப்படும் என்னும் உத்தரவாதமும் போர்ச் சூழல் சுமத்தியுள்ள அன்றாடக் கெடுபிடிகள் அகற்றப்படும் நிலைமையுமே இயல்பு நிலை திரும்புவதற்கான முதற்படிகளாகும்.

இயல்பு நிலைமைகள், விரைவில் திரும்புவதற்கும் தற்போதைய அமைதி நிலை தொடர்ந்தும் நிலை பெறவும் கூடிய உறுதியான அரசியல்ச் சூழல் உருவாக ஒவ்வொருவரும் தத்தம் பங்களிப்பை நல்குவதற்கு இப்புத்தாண்டு வழிகாட்டுவதாக அமையட்டும். பிறந்துள்ள விஷு வருடமானது ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு என்னும் மக்களின் எண்ணத்தைச் சாதிப்பதற்கான திடசித்தத்தை ஒவ்வொருவருக்கும் ஊட்டுவதாகட்டும். (ஐ)

## வடமாநில இந்து மாமன்றம் செய்தி

யாழ்ப்பாணம்,ஏப்.14

மலரும் புத்தாண்டிலாவது மனதில் சாந்தி, சமாதானம் நிலை பெற இறைவனைப் பிரார்த்திப்போம்.

வடமாநில இந்து மாமன்றம் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மலரும் விஷு புத்தாண்டானது இன்னலுற்று இருக்கும் தமிழ் மக்கள் வாழ்வில் நிலையானதோர் அமைதியை ஏற்படுத்த வேண்டும். தொடரும் கொடிய போரின் கொடுமையால் ஊரினை, உறவினை இழந்து ஏதிலிகளாக வாழும் மக்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஊட்டு வதாக அமைய வேண்டும்.

காலத்தின் கொடூரப் பிடியில் சிக்கியிருக்கும் எம்மவர்கள் கவலைகளை நீக்கவும் எம் பிரதேசம் வளமிக்கதாகவும், வறுமை நீங்கி வனப்புடன் திகழவும் புத்தாண்டு வழிசமைக்க வேண்டும்.எனவே மலரும் புத்தாண்டில் நாட்டில் சாந்தி சமாதானம் மலர நாம் எல்லோரும் இறைவனை வேண்டி அமைதியாகப் புத்தாண்டை கொண்டாட வேண்டும். எம்மவர் அனைவருக்கும் புத்தாண்டு மகிழ்வு தரவேண்டும் என்று எல்லாம வல்ல இறைவனை வேண்டுகிறோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## இந்துமத குருபீடம் பிரார்த்தனை

'விஷு' என்னும் நாமத்துடன் மலரும் சித்திரைப் புத்தாண்டு அனைத்து மக்களுக்கும் அமைதியையும், ஆனந்தத்தையும் ஏற்படுத்தும் ஆண்டாக மலர அனைத்து குருமார்களின் சார்பில் எமது அருளாசியை வழங்குகிறேன்.

இவ்வாறு சர்வதேச இந்து மத குருபீடத் தலைவர் சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

பல வழிகளாலும் சொல்லொணாத் துயரை அனுபவிக்கும் எம் மக்களுக்கு நிரந்தரமான- நிம்மதியான- வாழ்வு மலர அமைதி, சாந்தி, சமாதானம், நிலவ- இறையருள் வேண்டி புத்தாண்டு நல் வாழ்த்துக்களையும் அருளாசியையும் வழங்குகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஐ)

## பெருமாள் கோயில் பிரதம குருவின் ஆசிச்செய்தி

பகவத் கிருபையால் வேதம், ஆகமம், பஞ்சபூதங்கள், ஜீவராசிகள் தோன்றின. ஜீவராசிகளில் சிறப்பானதும், மேன்மையானதும் மானிட ஜீவன்.

வேதத்தின் ஓர் அங்கமானது சோதிடம். மனிதன் தனது எதிர்காலம், கல்வி, செல்வம், வாழ்க்கை முதலியவற்றை சோதிடம் மூலம் தெரிந்து - கொள்கிறான். தவ வலிமை மிக்க முனிவர்களால் சோதிடம், பஞ்சாங்கம் என்பன மனிதனுக்குத் தரப்பட்டன. இந்த விஞ்ஞான யுகத்திலே கண்டு பிடித்த அநேக விடயங்கள் முன்னரே புராண இதிகாசங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

அரிய மானிடப் பிறவியில் பிறந்த நாம் பல்வேறு துன்ப துயரங்களில் சிக்கித் தவிக்கிறோம். இவற்றிலிருந்து நாம் விடுபட வேண்டுமாயின் முழுமையாக இறைவனைச் சரணடைய வேண்டும். அதற்கு சிறந்த வழி நாமசங்கீர்த்தனமாகும்.

எப்போதும் எந்நிலையிலும் இஷ்ட தெய்வத்தின் நாமத்தையோ, புகழ்மாலைகளையோ உச்சரித்து வருவதனால் எமது எதிர்காலம் மட்டுமன்றி எமது சந்ததியினரின் வாழ்வும் சிறப்படையும் என்பதில் ஐயமில்லை.

புதிய வருடத்தில் நல்ல சிந்தனைகள், முயற்சிகள், நன்நெறிகளை கடைப்பிடிக்க சங்கற்பித்துக் கொள்வோம். அனைவரும் நாட்டின் அமைதி சமாதானத்திற்கு பிரார்த்திப்போம். உதயமாகும் புதிய விஷு வருடம் அனைவருக்கும் நன்மை பயப்பதாகுக.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

## புளொட் அமைப்பின் புத்தாண்டுச் செய்தி

உலகெங்கினும் தமிழன் வாழ்ந்தாலும் தாயக மண்ணில் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து சுதந்திரமாய் வாழும் காலமே அனைவருக்கும் புத்தாண்டாய் அமையும்.

தொடரும் கொடிய யுத்தம் ஓயவும் பகைமையுணர்வுகள், பேதங்களை மறந்து, போர்க்கருவிகளிற்கு பிரியாவிடை கொடுத்து, புரிந்துணர்வுகளுடனும் திறந்த மனத்துடனும், சுயநலன்களைக்களைந்து தமிழ் பேசும் மக்களின் சுபீட்சத்திற்காக அனைவரும் உழைக்க வேண்முமென இத் தினத்திலே உறுதி கொள்வோம் - என்று புளொட் அமைப்பின் புத்தாண்டுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவையில் ஒரு திருப்தி காண்பதே மகிழ்ச்சியென
யாழ்.நகரில் 15 வருடங்களுக்கு மேலாகத் தமக்கென ஒரு தனியிடம் பிடித்த

# சுப்பசோ வீடியோ ஓடியோ அன் கலர் லாப்

ஸ்தாபனத்தினர் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது உளம் கனிந்த
**புத்தாண்டு வாழ்த்துக்களைத்** தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளை அதிநவீன கொம்பியூட்டர்
மிக்சிங் முறையில் டிஜிரல் கமரா மூலம்



☆ வீடியோப்படம் பிடித்திடவும் ☆ வர்ணப்படம் பிடித்திடவும்

☆ புதிய பழைய சினிமாப் பாடல்களையும், பக்திப் பாடல்களையும சிறந்த முறையில் CDயிலிருந்து நேரடியாகப் பதிவுசெய்துகொள்ளவும்

☆ படச்சுருள்களை விரைவாகப் பிரதியாக்கம் செய்துகொள்ளவும்...! சிறந்த இடம். இவை மட்டுமல்ல!

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி இன்னும் சில மாதங்களில் எமது சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் **டிஜிரல் முறையிலான பிரதியாக்கல் கருவியினை அறிமுகப்படுத்தவுள்ளோம்** என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## சுப்பசோ வீடியோ ஓடியோ அன் கலர் லாப்





இல.149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P. 2082

இல.198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/16221)

## அன்பான வாடிக்கையாளர்களுக்கு

# கொமர்ஷல் வங்கியினரின் புத்தாண்டு வாழ்த்துக்கள்





மலருகின்ற புத்தாண்டில்
மகிழ்வுடன் கூடி
புத்தாடை தனை உடுத்தி
புதுப் பொலிவுடன் திகழ்ந்து
உற்றாருடன் இணைந்து
உற்சாகத்துடன் உரையாடி
சீரும் சிறப்பும் பெற்று வாழ
வாழ்த்துகிறோம்!





**மலரும் புத்தாண்டில்!**
**நல்லவையே நடக்கட்டும்!**
**நடப்பவையெல்லாம் நல்லவையாகட்டும்!**

# கொமர்ஷல் வங்கி

**உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்.**

(C/16294)

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ். மரியன்னை பேராலய மேய்ப்புப் பணிச் சபையினர் நாளை (15-04-2001) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.30 மணிக்கு நடத்தவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் (15-04-2001) பி.ப. 4.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலய முன்றலில் நடைபெற உள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

*யாழ்.மரியன்னை பேராலய மேய்ப்புப் பணிச்சபை.* (86581) அ.பிற்றர் (குமார்). பொருளாளர்



தென்மராட்சி மக்களுக்கு

புதுவருட வாழ்த்துக்கள்

குல தெய்வங்களின் அருள் கிடைக்க

பிரார்த்தனை-நல்லாசி.

சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்

(86584) புன்னாலைக்கட்டுவன்.



அனைவருக்கும்

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்


உரித்தாகுக!

மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்

(86585) த.பெ.இல. 77, யாழ்ப்பாணம்.


## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 09 - 05 - 1925



ஆண்டவன் அடியில் 31 - 03 - 2001

# அமரர் பொன்னையா வாதவூரன்

**(RTD. - Chief Clerk, Railway Department)**

**திதி : ஸப்தமி**

அன்பின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்திற்கு இலக்கணமாய் இருந்து எம்மை எல்லாம் வழி நடத்தி வாழ்ந்து காட்டிய உங்கள் நினைவு உயிர் உள்ளமட்டும் நீங்காது என்று காண்பேன்.............

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எனது அருமைச் சகோதரனின் துயரச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மரணச்சடங்கில் கலந்துகொண்டு அஞ்சலி, ஆறுதல் தெரிவித்தவர்கள் மற்றும் பல்வேறுவழிகளிலும் உதவியவர்கள், உதவுகிறவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாளை (2001-04-15) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண - அந்தியேட்டிக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

*சிவசக்தி கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (C/16302)

**திருமதி நாகேந்திரன் கௌரி.**
**(சகோதரி)**

## நீங்கா நினைவில் 6 ஆம் மாதம்



அமரர்

**அந்தோனிப்பிள்ளை எட்வேட் பிறின்ஸ்**

(இளைப்பாறிய உதவி முகாமையாளர், அரச மரக் கூட்டுத்தாபனம்)

நினைக்க நினைக்க மனம் உருகுதே வாடி
நித்தமுமை மறவாச் சிந்தை நாளே
அனைத்திலும் அன்புருவாய் அமர்ந்தவரே!
புத்தியையூட்டிப் பண்பினைக் காட்டி பாசத்தின் வீச்சில் அணைத்தவரே!
எம்மைத் துணையின்றி ஏங்க வைத்தீரே!
நெஞ்சக் கூட்டில் தங்கள் பிரிவுத் துயரம்
எங்கள் தேகம் மடியும் நாளிலே தீரும்!

53, Temple Road,
Jaffna.

உங்கள் நினைவில் வாழும்,
பிள்ளைகள், மருமகன், மருமகள்,
(86539) பேரப்பிள்ளைகள்.


வையத்தில் இன்பமாக வாழ்வாங்கு வாழ இன்ப வாழ்வுக்கு உறுதுணையாய் அமைதி, சமாதானம் நிலைபெற்று ஓங்க அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

தரமான நல்லெண்ணெய் உற்பத்தி செய்வதில் முன்னோடியாக விளங்கும்

வி.எஸ்.எஸ். சாப்பாட்டு நல்லெண்ணெய் தயாரிப்பாளர்கள்

V.S.S. LUNCH GINGELLY OIL

வ.ச.சுந்தரலிங்கம், சோமசுந்தரம் றோட், ஆனைக்கோட்டை.

(C/16308) ஸ்ரீரங்கன் களஞ்சியம், ஆடியபாத வீதி, திருநெல்வேலி. T.P. : 2975



கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!

ஹோட்டல் சீவம்ஸ்

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்குச் சிறந்த சேவை செய்து வரும் ஒரே ஸ்தாபனம் ஹோட்டல் சீவம்ஸ்.
இன்றே விஜயம் செய்யுங்கள்.
கொழும்பில் தங்குவதற்கேற்ற மிகச் சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கேற்ற அறைகளும் சிற்றுண்டிச் சாலையுடன் அமைந்த ஒரே இடம். விஜயம் செய்யுங்கள்:

HOTEL SEIVAMS (GUEST HOUSE)

(86577) No.29A, Sangamitha Mawatha, Kotahena, Colombo - 13. T.P. No.356522

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் (மஞ்சள், வெள்ளை, பச்சை, நீலம்) விற்பனைக்கு உண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர்வளவு) (86507)

இறைச்சிக்கோழி BROILERS, இறைச்சிக்கு உகந்த கோழி சேவல் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 68, OLD PARK ROAD, JAFFNA. (86508)

இறைச்சிக்கோழி **BROILERS,** கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (86567)

இறைச்சிக்கோழி (புரோயிலர்), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (86620)

## திருத்துதல்

உத்தரவாதத்துடன் **T.V.,** றேடியோக்கள், டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ள N.T. ராஜன், 140, K.K.S. வீதி, (சத்திரத்துச் சந்தி) யாழ்ப்பாணம். (86546)

## இசைவகுப்புகள்

எமது நியூ வீணா கானம் இசை மன்றில் உள்ளங்கைக்குள் அடங்கும் சிறிய கருவியான மௌத் ஓர்கன் கற்பிக்கப்படும். ஏனைய வகுப்புகளும் இன்று 14.04.2001 ஆரம்பம். தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன், 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ் நகர். (86587)

## A/L பௌதிகவியல் 2002, 2003

பௌதிகவியல், இணைந்த கணிதம் மிகச் சிறப்பாக அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்பிக்கப்படும். முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடிக்கப்படும். சந்திப்பு: திங்கள், வெள்ளி தவிர ஏனைய நாளகள். விவரங்களுக்கு: R.பாலசுப்பிரமணியம் **B.Sc. (cey) Dip.in Edu.** 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (86597)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள டீ பிறிஷர் **(D FREEZAR)** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கண்ணா, 381, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (86605)

தனிய பெற்றோலில் சொந்தப் பாவிப்பில் உள்ள YAMAHA MATE - 90 மோட்டார் சைக்கிளும், 21/4m நீளமும் 1m அகலமும் கொண்ட ரியூட்டறிக்குப் பாவித்த விளம்பரப் பலகையும் (நிறுத்தியுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 417, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அண்மையில்) (85615)

A/C (குளிரூட்டி) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: V.கந்தசாமி, இல.82, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு (உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகில்). (86623)

## T.V. விற்பனைக்கு

12" கறுப்பு வெள்ளை A/C, D/C, 20" கலர் (NATIONAL) விற்பனைக்கு உண்டு. N.T. ராஜன், 140, K.K.S. வீதி, சத்திரத்துச் சந்தி, யாழ்ப்பாணம். (86545)

## சனி, செவ்வாய் மாற்றங்கள்

ஏப்ரல் 11,13 இல் சனி யுத்தச் செவ்வாய் மாற்றங்கள் நாட்டில் சுமுக நிலையை உண்டாக்கும். சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள் ரூ.10 எங்கும் கிடைக்கும். கணிப்பாசிரியர்:- சத்யா, 3 ஆம் மைல் ஆனைக்கோட்டை. **T.P.021-2753** (86618)

## தவறிவிட்டது

ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த பன்னீர்செல்வம் சேகர் என்பவரது தேசிய அ.அட்டை (780443278V), 09-04-2001 அன்று யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கன்னாதிட்டிச் சந்தியிலுள்ள சிற்றி சிகை அலங்கரிப்பு நிலையத்தில் ஒப்படைத்துதவவும். (86621)

ஜெனரஞ்ஜனி, பராஜசிங்கம் என்பவரது விசேட அ.அட்டை (இல. 0903002344), பாடசாலை அ.அட்டை (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) என்பன 11.04.2001 அன்று யாழ்.நவீன சந்தையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்து உதவவும். (86637)




புலரும் புத்தாண்டே புதுவாழ்வு அளிப்பாய்!
புடைவைத் தினுசுகளை மொத்தமாகவும் சில்லறையாகவும்
நிதான விலையில் பெற்றிட
**ஏகாம்பரம் புடைவை மாளிகை**
72(9), பெரிய கடை, யாழ்ப்பாணம். (C/16201)

இனித்திடும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!
உங்கள் வனப்பு மிகு வடிவத்தின்
வரலாற்றுப் பொக்கிஷம்
**றெஸ்பொயின்ற் அல் சுஹானாஸ்**
23, 24A, மின்சார நிலைய வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C/16202)



**வாழ்த்துகின்றோம்! வாழ்த்துகின்றோம்!!**

*அன்பான வாடிக்கையாளர்களே!*

மலரும் புத்தாண்டில் உங்கள் குடும்பத்திற்கு நிறைவான மகிழ்ச்சியும் எமது பிரதேசத்திற்கு நிலையான சமாதானமும் கிடைக்கப் பெற நாம் பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் தேவைகளை நிறைவு செய்ய எங்கள் சேவைகள் இதோ!

☆ நடைமுறைக்கணக்குகள்
☆ ஜனஜய சேமிப்புக் கணக்குகள்
☆ சிசு உதான சேமிப்புக் கணக்குகள்
☆ இசுறு உதான சேமிப்புக் கணக்குகள்
☆ வனிதா வாசனா சேமிப்புக் கணக்குகள்
☆ யாத்திரீகர்கள் கணக்குகள்
☆ முதலீட்டுச் சேமிப்புக் கணக்குகள்
☆ வதிவற்றோர் நாணயக் கணக்குகள்
☆ வதிவுள்ளோர் நாணயக் கணக்குகள்
☆ சேமிப்புக்கணக்குகள்
☆ நிலையான வைப்புக்கள்
☆ வெளிநாட்டு நாணய மாற்றல்கள்
☆ வர்த்தகர்களுக்கான கடன் திட்டங்கள்
☆ ஆசிரியர்களுக்கான கடன் திட்டங்கள்
☆ தனியார், அரச கூட்டுஸ்தாபன ஊழியர்களுக்கான கடன்கள்
☆ பிரதேச சபை ஊழியர்களுக்கான கடன்கள்
☆ வீடமைப்புக் கடன்கள்
☆ சுய தொழில் ஊக்குவிப்புக் கடன்கள்
☆ வரையறையற்ற அடமானக் கடன்கள்
☆ நகை அடைவு கடன்கள்
☆ தற்காலிக மேலதிகப் பற்றுக்கள்
☆ உத்தரவாதக் கடிதங்கள்
☆ நாணயக் கடிதங்கள்

நாடளாவிய தொலைநகல் பண மாற்றங்கள்
**உங்கள் வளமான வாழ்விற்கு வழிகாட்டும் வங்கி**
**மக்கள் வங்கி**
(C/16291)

**திருமறைக் கலா மன்றம்**

புதிதாய் வந்த
இனிய ஆண்டே!
உன்னை வரவேற்கின்றோம்.
நீ
இடர் அகற்றி,
ஒளி வீச வருவாயா?
புது வாழ்வைத் தருவாயா?
எம் மண்ணில்,
எம் கலைகள்,
தழைத்தோங்க
எமக்காய்,
குரல் தருவாயா?
எமக்குரியவைகளை
காப்பாயா.......?

பிறந்த இப்புதிய ஆண்டு அனைவருக்கும் இனிதாய் அமைந்து மண்ணில் அமைதித் தளிர் கிளம்ப வாழ்த்துகின்றோம்.

**அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.**

238, பிரதான வீதி,யாழ்ப்பாணம்.
**T.P. 021-2393**
- மன்ற அங்கத்தவர்கள் -
(C/16289)

பெரிய வெள்ளி உயிர்த்தெழுந்த ஞாயிறு
தினங்களை முன்னிட்டு
*இருபாலை*
**கானான் ஜெப ஆலயம்**
*நடத்தும்*
கலை நிகழ்ச்சிகளும் ஆராதனைகளும்
*காலம்:–* இன்று (14-04-2001) சனிக்கிழமை
*நேரம்:–* மாலை 3.30 மணி
☆ இன்னிசை கானங்கள் கண்ணுக்கினிய நடனங்கள்
☆ எழுச்சியூட்டும் நாடகங்கள் பார்த்து மகிழ
யாவரும் திரண்டு வாருங்கள்!
யாவும் இலவசம்!!
(பெரிய வெள்ளி, உயிர்த்தெழுந்த ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணிக்கு ஆராதனை நடைபெறும்.)

"நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது" ஏ-53-5

கானான் ஜெப ஆலயம்,
*இருபாலை.*
(C/16295)

அலையும் இதயங்கள் அமைதிகண்டு, துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சூழ பிறக்கின்ற இப் புத்தாண்டு
அனைவருக்கும் வழிசமைக்கும்....... என்ற உறுதியுடன் அனைவருக்கும் தனது புத்தாண்டு
வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்வுறுகின்றது
**சிவம் ரெக்ஸ்ரைல்ஸ்**
நங்கையர் விரும்பும் இன்றைய நவநாகரிகத்திற்கேற்ப இந்தியன்/சிங்கப்பூர் மற்றும் வெளிநாட்டுச் சேலைகள்
திருமண வைபவங்களுக்கு ஏற்ற காஞ்சிபுரம், மணிப்புரி, பட்டுப் புடைவைகள், றெடிமேட் ஆடைகள் யாவும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்!
**சிவம் ரெக்ஸ்ரைல்ஸ்**
**K.K.S.ROAD, (INUVIL)** (C/16282) **கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**



# ஆண்டு விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 14 'மணிக்குரல்' சேவையின் 28 ஆவது ஆண்டு விழாவை யொட்டிய நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளன.

இதனையொட்டி நடை பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வர்களுக்கான பரிசில் வழங் கும் நிகழ்வும் அத்துடன் பாட்டுக்குப் பாட்டு. தேனிசை மழை, இசைநிகழ்வு ஆகியன வும் விழாவில் இடம்பெற வுள்ளன.

'மணிக்குரல்' விளம்பர சேவை உரிமையாளரது இரு பிள்ளைகளின் 6 ஆம் ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வாகவும் இது நடைபெறுகிறது (க-10)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
தமது புதுவருட வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறார்கள்
**தேனுஷா நகைத் தொழிலகத்தினர்**
உரிமையாளர் ச. செல்வகுமார்
இல. 81/1, சீனியர் ஒழுங்கை, கலட்டி,
யாழ்ப்பாணம்.
(86553)

இடம்மாறி இடம்மாறி இடர்கள் பல கண்டு தடம்புரண்ட எம் மக்கள் இனியேனும் திடம் காண தடையின்றித் தந்திடுவாய் சமாதானத்தைப் புத்தாண்டே!
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
**குமரன் மில்,**
194, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(86618)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 14 கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே. சி சி சி. வெற் றிக்கிண்ணத்துக்காக நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி கள் நாளை ஞாயிற்றுக் கிழமை முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத் தில் ஆரம்பமாகி நடைபெற வுள்ளன.

நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறும் முதல் சுற்றுப்போட்டியில் ஸ்ரான்லி அணியை எதிர்த்து விக்ரோ ரியன்ஸ் அணியும் பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யூனியன்ஸ் அணியை எதிர்த்து சென்ற லைட்ஸ் (புளூஸ்) அணியும் விளையாடவுள்ளன. (க-7)

**SHAMROCK**
கணக்கீடு
A/L 2003
ஆரம்பமாகியுள்ளது.
A/L 2002,
2001 & DAY
நடைபெறுகின்றது.
**Mr. S. தவா**
B Com.(Hons)(Acc spl.
(சி/16298)

# 'உள்ளம்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம். ஏப். 14 கொக்குவில் வளர்மதி முன் னேற்றக் கழகத்தின் ''உள் ளம்'' கலை, இலக்கிய சமூக இதழின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கழக அரங்கில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல் கலைக்கழக பட்டப்படிப்பு கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முக தாஸ் பிரதம விருந்தினராக வும், மேலதிக அரசாங்க அதி பர் து. வைத்திலிங்கம் கௌரவ விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக விபு லயியல் துறைப் பேராசிரியர் கா. குகபாலன், கல்வியற் றுறை சிரேஷ்ட விரிவுரை யாளர் மா. சின்னத்தம்பி மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. தவ நாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க-7)

# ஒன்றுகூடல்

அரியாலை, ஏப். 14 யாழ். திருமறைக் கலா மன்றம் அண்மையில் வழங் கிய திருப்பாடுகளின் காட்சி யான ''காவிய நாயகன்'' என்ற நிகழ்வில் பங்குபற்றிய அனைத்துக் கலைஞர்களுக்கு மான ஒன்று கூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மன்ற அரங்கில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காவிய நாயகன் என்ற நிகழ்வில் இருநூறுக்கு மேற் பட்ட கலைஞர்கள் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது. (க—17)

# இன்று ஆத்மீக விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஏப். 14 புதுவருடத்தை யொட்டி இன்று செல்வச்சந்நிதி ஆலய மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு 'மயில்வாகன னைச் சந்திக்கிலேன்' எனும் தலைப்பிலும் புலோலி புற் றளைப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் மாலை 5 மணிக்கு 'வெவ் வினையை வேரறுக்க வல் லான்' எனும் தலைப்பிலும் சுவாமி சித்ரூபானந்தா வினால் ஆத்மீக விரிவுரை கள் நிகழ்த்தப்படவுள்ளன. (க-10)

# கொழும்புக்கு கப்பலில் புகையிலை, வெங்காயம்

வடமராட்சி, ஏப். 14 புகையிலை, வெங்காயம் மற்றும் பனை உற்பத்திப் பொருள்கள் என்பன போல் கொட கப்பல் மூலம் கொழும் புக்கு எடுத்துச் செல்லப்பட வுள்ளன.

பருத்தித்துறை துறைமுகத் தில் வைத்து ஏற்றப்படும் இப் பொருள்கள் புத்தாண்டுக்குப் பின்னர் கொழும்பில் இறக்கப் படும் என துறைமுக வட்டா ரங்கள் தெரிவித்தன.

**நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ் சீட்டிழுப்பு முடிவுகள்**

நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ் ஸ்தாபனத்தின் பொன்விழாவை முன்னிட்டு 12—04—2001 அன்று நடைபெற்ற சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர் விவரம்:

| | |
|---|---|
| முதலாம் பரிசு மேசை மின்விசிறி | பரிசுச்சீட்டு இல.- 520 N. ஆனந்தராசா, 40/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு குளியலறைக்கண்ணாடி யும் அதனுடன் இணைந்த பொருள்களும் | பரிசுச்சீட்டு இல. 837 சேவியர் எட்வேட், 579/2, குருநகர், யாழ்ப்பாணம். |
| மூன்றாம் பரிசு மின்சாரக்கேற்றில் | பரிசுச்சீட்டு இல. 777 V. தவேந்திரன் அத்தாய், அல்வாய். |
| ஆறுதல் பரிசுகள் | |
| 1. மின்சார மேசை விளக்கு | பரிசுச்சீட்டு இல. 765 A. நிக்சன், 13, தண்ணீர்த் தாங்கி வீதி, குருநகர். |
| 2. குசினி பேசின் | பரிசுச்சீட்டு இல. 890 வசந்தி எலெக்ரிக்கல்ஸ், சுன்னாகம். |
| 3. மின்னடுப்பு | பரிசுச்சீட்டு இல. 877 M. முரளிதரன், ஸ்ரேசன் வீதி. கோண்டாவில் |
| 4. மின்னழுத்தி | பரிசுச்சீட்டு இல. 695 K சுரேஷ், 70/2, பலாலி வீதி, கந்தர்மடம். |
| 5. HAND PUMP | பரிசுச்சீட்டு இல. 904 N. சங்கர், செட்டித்தெரு, நல்லூர். |
| 6. மேசை விளக்கு | பரிசுச்சீட்டு இல. 949 K. செல்வராசா, துன்னாலை வடக்கு, கரவெட்டி. |
| 7. வட்ட ரியூப்லைற் | பரிசுச்சீட்டு இல. 901 N. துரைசிங்கம், G P.S. வீதி, கல்வியங்காடு. |

பரிசு பெற்ற மின்னிணைப்பாளர்களின் விவரம்

1. T. தங்கசிவம், ஏழாலை மத்தி, ஏழாலை.
2. T. ஆறுமுகம், 6, இராச வீதி, நல்லூர்.
3. R. சண்முகானந்தன், 18/1, சிவகுருநாதர் வீதி. நீராவியடி, யாழ்ப்பாணம்.
4. S. ஜெயரட்னசிங்கம், 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
5. P. இராசகுமார், மாதா கோயிலடி, அல்வாய்.

பரிசு பெற்றோர் கொள்வனவுச் சிட்டை, பற்றுச்சீட்டு என்பனவற்றை ஒப்படைத் துப் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும். எமது பொன்விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியையும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ்**
141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
போன்: 20372
(86609)

**நீங்காத நினைவு**
**12 ஆம் ஆண்டு**



**அமரர் S. T. சந்திரகுமார்**
[கிராம சேவையாளர், கரம்பொன் மேற்கு]

அழிப்பு:- 14—04—1989

அன்பு நிறைந்த செல்வமகனே ராசா!
இன்று எல்லோரும் உம்மை நினைவு கூரும்
நாள். இந்நாளை நினைத்துப் பார்க்கும் போது
எங்கள் கண்ணீர் இரத்தக் கண்ணீராக மாறுகின்றன
ராசா! நீர் அன்பாக வளர்த்த 'டாலோ' குஞ்சு
பதின்னாங்கு வருடாங்களாக இருந்து விட்டு
எங்களை விட்டுப்பிரிந்து எட்டுமாதங்களாகி விட்டன
எங்களின் மனம் வேதனை அடைகின்றது.

அன்பு அம்மா:- செ. பாக்கியம்
அன்பு அக்கா:- S. T. சகுந்தலாதேவி

40/05, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(86576)

## 60 மைல் நீளமான வீதி படுமோசம்:

# வன்னிக்கான உணவு வாகனத்தொடரணிகள் எவ்வேளையும் இடைநிறுத்தப்படும் அபாயம்

## அங்கு சென்று திரும்பிய அரச அதிபர் எச்சரிக்கிறார்

வவுனியா, ஏப். 14

பிரமணாளங்குளம் சோதனைச் சாவடியில் இருந்து மல்லாவி வரையிலான 60 மைல் நீளமான வீதி வாகனப் போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் —

இந்தப்பாதை ஊடாக நடைபெற்றுவரும் வன்னிப் பகுதிக்கான உணவு வாகன தொடரணிகள் எந்த நேரத்திலும் இடைநிறுத்தப்படும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை வன்னிப் பகுதிக்குச் சென்று வந்த அரச அதிபரை, வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச நிலைவரம் தொடர்பாகக் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:—

இராணுவத்தினரின் பிரமணாளங்குளம் சோதனைச் சாவடியில் இருந்து வன்னிப் பகுதிக்குச் செல்லும் வீதிகள் அனைத்தும் பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமலும், பராமரிக்கப்படாலும கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

இதனால் இந்த வீதிகளுக்கு ஊடாக பொதுமக்கள் பெரும் ஆபத்துகளுக்கு மத்தியிலேயே தமது பயணத்தைத் தொடர்கின்றனர்.

இந்த வீதிகளைப் புனரமைப்பதற்குத் தேவையான தார் மற்றும் உபகரணங்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து எடுத்துச் செல்ல படையினர் அனுமதி மறுத்துள்ளனர். இதனால் அந்த வீதிகள் புனரமைக்கப்படாமல் இருக்கின்றன.

இந்த வீதி ஊடாகவே உணவுப் பொருள் வாகன அணிகளும், செல்கின்றன. கடந்த சில தினங்களாக இந்தப்பகுதியில் பெய்த மழையால் வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

அகதி முகாம்களிலும், குடியிருப்புத் திட்டங்களிலும் இடம்பெயர்ந்த மக்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் குடிசைகள் பல சேதமடைந்துள்ளன. இதனால் மழை காலங்களில் வெள்ளத்தின் மத்தியிலேயே தமது வாழ்வைத் தொடர்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை—

கிளிநொச்சியிலும், மல்லாவியிலும், நடந்த விவசாயக் குழுக்களின் கூட்டங்களில் பங்குபற்றிய அரச அதிபரிடம் விவசாயிகள் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

வன்னிப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் மற்றும் அரிசி வகைகளை சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற வசதிகளை உடனடியாகச் செய்து தருமாறு விவசாயிகள் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர்.

வன்னிப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லைச் சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதால் இவ்வருடம் சிறுபோக நெற்செய்கையை தாங்கள் கை விட்டுள்ளதாகவும் அரச அதிபரிடம் விவசாயிகள் எடுத்துக் கூறினர். (க-6)

## பாடசாலைகளில் சுகாதாரக் கழகங்கள்

அச்சுவேலி, ஏப். 14

பாடசாலைகளில் ''சுகாதாரக் கழகங்கள்'' நிறுவப்படுகின்றன. பாடசாலைக் கிராமத்தின் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்திப் பொதுமக்களின் சுகவாழ்வுக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சுகாதாரக் கழகங்கள் ஈடுபடும்.

உடற்கல்வி ஆசிரியரைப் பொறுப்பாசிரியராகவும் மாணவர்களை நிர்வாகிகள் உறுப்பினர்களாகவும் கொண்டதாகச் சுகாதாரக் கழகங்கள் செயற்படும்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பாடசாலைகள் தோறும் சென்று சுகாதாரக் கழகங்களை அங்குரார்ப்பணம் செய்து வருகின்றனர். (க-11)

## இனச் சண்டைகளுக்குக் காரணமான

# ஆயுதப் பெருக்கத்தைத் தடுக்க பாகிஸ்தான் அரசு நடவடிக்கை

இஸ்லாமாபாத், ஏப். 14

பாகிஸ்தானில் அதிகரித்து வரும் இனச்சண்டைகளை தடுப்பதற்காக சட்ட விரோத ஆயுதங்களைக் கைப்பற்றவும் அனுமதி பெறப்பட்ட ஆயுதங்களை பொது இடங்களில் பகிரங்கமாகக் கொண்டு செல்வதைத் தடுக்கவும் பாகிஸ்தானின் இராணுவ அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் பொது இடங்களில் ஆயுதங்களை பார்வைக்கு வைக்கக் கூடாது என்ற சட்டத்தை மீறியதற்காக 3 ஆயிரத்து 500 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ஆயுதங்கள் சர்வ சாதாரணமாக உபயோகிக்கப்படுவதற்கு எதிராக நாடு தழுவிய இயக்கம் ஒன்றை நடத்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

பாகிஸ்தானின் பல்வேறு நகரங்களில் பெரும்பான்மை 'சுனி' இன முஸ்லிம்களுக்கும் சிறுபான்மை ஷியா இன முஸ்லிம்களுக்கும் இடையே மூண்ட ஆயுதக் கலவரத்தின் பிறகு அரசு மேற்கூறிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது

ஆப்கானிஸ்தானில் இருந்து கடத்தி வரும் ஆயுதங்களை மலிவு விலையில் விற்கும் ஆயுத சந்தைகள் பாகிஸ்தானின் எல்லைப்புறப் பகுதியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## மரபை மீறிய மலைப் பாம்பு

சிங்கப்பூர் வனவிலங்குப் பூங்காவில, யாஷி என்ற அனகொண்டா இன மலைப்பாம்பு 23 குட்டிகளை ஈன்றுள்ளது அனகொண்டா மலைப் பாம்பும் குட்டிகளும் நலமாக உள்ளன.

குட்டிகளை ஈன்ற பின்னர் அனகொண்டா மலைப்பாம்புகள் இறந்துவிடும்என்றமரபை யாஷி மீறி உயிருடன் உள்ளது.

தென் அமெரிக்கக் காடுகளில் காணப்படும் அனகொண்டா மலைப்பாம்புகள், மிகவும் ஆபத்தானவை என்பது குறிப்பிடத்தக்கது.

## சுவீடன் பிரதமரின் கொரிய விஜயம்

எதிர்வரும்மே மாதம் 2ஆம் திகதி சுவீடன் நாட்டுப்பிரதமர் டொராஸ் டோபன் இரு நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு வடகொரியா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளார்,

இரண்டு கொரியர்களின் அமைதி நடவடிக்கைகளுக்கு உதவு முகமாகவே சுவீடிஷ் பிரதமர் இந்த விஜயத்தை மேற்கொள்வதாகக் கூறப்படுகிறது.

## தெஹ்ரான் பிரகடனம் கைச்சாத்தானது

சர்வதேசப் பயங்கரவாதத்தை எதிர்ப்பது குறித்த தெஹ்ரான் பிரகடனத்தில் நேற்றுமுன்தினம் இந்தியப்பிரதமர் வாஜ்பாயும், ஈரானிய அதிபரும் கைச்சாத்திட்டனர்.

ஈரானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் வாஜ்பாய், இருநாடுகளிடையேயான உறவுகள் மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்து ஈரானிய அதிபருடன் பேச்சு நடத்தினார்.

## காஸாப் பிரதேச மோதலில் பலஸ்தீன மருத்துவர் பலி!

காஸா, ஏப். 13

காஸாப் பிரதேசத்தில் உள்ள அகதிகள் குடியிருப்புப் பகுதி ஒன்றில், இஸ்ரேலிய இராணுவத்துக்கும் பலஸ்தீனிய பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு முழுவதும் கடும் மோதல் நடைபெற்றது.

இந்த மோதலில் பலஸ்தீன மருத்துவர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் —

குறைந்தது 20 பலஸ்தீனர்கள் காயமடைந்ததாகவும் — அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பலஸ்தீன பொலிஸ்துறைத் தலைமையகத்தை ரொக்கெட்டுகள் தாக்கியதில் 17 பேர் காயமடைந்தனர்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் நடைபெற்றுவரும் மோதல்களில் இடம்பெற்ற உக்கிர தாக்குதல்களில் இதுவும்ஒன்று என்று கூறப்படுகிறது. (ஒ-9)


## மரண அறிவித்தல்கள்

### கனகசபை குககுமாரராஜா

இருபாலையைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உப அதிபராகவும், விரிவுரையாளராகவும் கடமையாற்றிய கனகசபை குககுமாரராஜா அவர்கள் நேற்று (13—04—2001) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S R. கனகசபை (சித்திர வித்தியா தரிசி), நீலாயதாட்சி தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் சிதம்பரவல்லி தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக்கணவரும், காயத்திரி (பிரதேச சபை, சாவகச்சேரி), சுகந்தினி (கல்வி அலுவலகம், வேலணை) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, கமலேஸ்வரி, சுப்பிரமணியராஜா, செந்தூர்ராஜா மற்றும் ஸ்கந்தராஜா ஆகியோரின் அருமைச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13—04—2001 நேற்று நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில்தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

51/12, செட்டித் தெரு,
நல்லூர். (86635)

### திருமதி ஜெயநாயகி சேனாதிராசா

காங்கேசன்துறை வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகரத்தினம் சேனாதிராசாவின் அன்பு மனைவி திருமதி ஜெயநாயகி கடந்த (12—04—2001) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் டாக்டர் செல்வி ஜெயந்திதேவி (யாழ். போதனா வைத்தியசாலை), அருணேசர் (நோர்வே), திருமதி சலோசனா, கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்ற தயாபரன், யோகராஜா (ஜேர்மனி), வசந்தி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஜெயஹரி (நோர்வே), கிருஷ்ணமூர்த்தி (ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புமாமியாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னுத்துரை, சுப்பிரமணியம் சபாரத்தினம், திருமதி செல்வநாயகி சுப்பிரமணியம் மற்றும் திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், திவாகர், கிஜிதரன், தனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் (12-04-2001) வியாழக்கிழமை மாலை மல்லாகத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் செல்வி ஜெயந்திதேவி சேனாதிராசா
(மகள்)
யாழ். போதனா வைத்தியசாலை.

காங்கேசன்துறை வீதி,
மல்லாகம். (86626)

## மரண அறிவித்தல்

### நாராணர் கிருஷ்ணசாமி

(N. K. ஆறுமுகம்)

(இளைப்பாறிய இ.போ.ச. சாரதி (இல.23), கோண்டாவில் சாலை)

தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் மூளாயை வதிவிடமாகவும் கொண்ட நாராணர் கிருஷ்ணசாமி நேற்று (13-04-2001) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாராணர்—செல்லாச்சி தம்பதிகளின் மகனும் அரியமலரின் அன்புக் கணவரும் சந்திரமோகன் (ஒக்ஸ்பாம், வவுனியா), சந்திரகாந்தன் (விமானப்படை அதிகாரி, கட்டுநாயக்கா), சந்திரரூபன் (மின் ஒப்பந்தகாரர், தொல்புரம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருமதி மங்கையர்க்கரசி, திருமதி பிறேமிளா, திருமதி கோமதி ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-4-2001) சனிக்கிழமை காலை 10-00 மணிக்குத் தொல்புரம் மத்தியிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி சந்திரரூபன்
(மகன்)

சின்னம்மன் கோயிலடி,
தொல்புரம் மத்தி,
சுழிபுரம். (86652)

## வாகனகாரர் கவனத்துக்கு!

### கராஜ் இடம்மாற்றம்

ஈச்சமோட்டை, பீச் றோட்டில் இயங்கிவந்த சின்னத்தம்பி கராஜ் இன்று (14.4.2001) சனிக்கிழமை 8.00 மணி முதல் இராசாவின்தோட்டத்திலுள்ள ஈஸ்வரன் கராஜ்சில் (மெட்டை பாஸ் கராஜ்) இயங்கும் என்பதை அன்புடன் தெரிவிக்கின்றோம்.

உரிமையாளர்:
பெரியண்ணையின்
தம்பி
சின்னண்ணை
(மெக்கானிக்)

*இராசாவின் தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (86657)


## தொலைபேசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் தொலைபேசிப் பாவனை அதிகரித்துள்ளது. அந்தப் பாவனைக்கு ஏற்றவகையில் சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

1990ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணம், ஆனையிறவு, மடுதந்தை ஆகிய இடங்களில் அமைந்திருந்த தொலைத்தொடர்புக் கோபுரங்கள் ஊடாக குடாநாட்டுக்கான தொலைபேசிச்சேவை வழங்கப்பட்டு வந்தது.

1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதே முறையில் தொலைத்தொடர்பு வசதி கிட்டியது. ஆனையிறவு விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட பின்னரே சேவைகள் சீர்குலைந்தன.

ஆனையிறவுக்குப் பதிலாக மன்னாரில் தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலும் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டு வருகின்றது.

மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்புக் கோபுரத்தில் "றிப்பீற்றர்" கருவி பொருத்தப்பட வேண்டியுள்ளது. அந்தக் கருவியை பிரான்ஸில் இருந்து பெறுவதற்காக கேள்விக் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கருவி இங்கு வந்து சேர்ந்து அதனைப் பொருத்துவதற்கு ஆறுமாத காலமாவது செல்லும். அதன் பின்பே குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான சேவை சீராகும். தற்சமயம் உள்ள நெருக்கடி நிலை அதுவரை தொடரவே செய்யும் - என்று அவர் கூறினார். (ஐ-3)

## யுத்தநிறுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக நோர்வேத் தூதர் ஜனாதிபதிக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் விளக்கம் அளித்துள்ளார்.

புலிகள் பிரதிநிதிகளுடன் அங்கு தாம் 10 மணி நேரம் நடத்திய பேச்சுக்களின்போது தடைசெய்யப்பட்ட பொருள்களை வன்னிக்கு அனுப்புவது குறித்து கலந்துரையாடியபோது -

வன்னிப் பகுதி மீது குண்டுவீச்சு நடத்துவது பற்றியும், தமது அமைப்பின் மீது அரசு விதித்துள்ள தடை பற்றியும் தன்னிடம் சுட்டிக் காட்டியதாகவும்-

ஆனால் அந்த விடயங்களைப் பேச்சுக்கான நிபந்தனையாக அவர்கள் தெரிவிக்கவில்லை என்றும் -

நோர்வேத் தூதர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதி குறித்தும் தாம் புலிகளுடன் கலந்துரையாடியதாக நோர்வே தூதர் தெரிவித்துள்ளார் என்று அந்தச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

## அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பிரேரணையும் தோல்வியடைந்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்றும் - சுட்டிக் காட்டப்பட்டது.

இந்நிலையில் -

வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பு நடப்பதற்குச் சில மணி நேரத்துக்கு முன்னர் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய, உதவித் தலைவர் காமினி அத்துக்கொறளை ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார் என்றும் -

அதைத் தொடர்ந்து வரவு - செலவுத் திட்டப் பிரேரணையைத் தோற்கடிக்கும் முயற்சியை ஐ.தே.கட்சி கைவிட்டது என்றும் -

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

பொதுத் தேர்தல் நடந்து ஒரு வருட ஆட்சிக் காலத்துக்குள் அரசு கவிழ்க்கப்பட்டால் தாம் ஆட்சிக்கு வரமுடியும் என்ற நோக்குடன் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் அரசைக் கவிழ்ப்பதற்காக அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வர அக்கட்சி முடிவு செய்துள்ளது.

இதேவேளை -

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.கட்சிக்குத் தாவி அரசுக்கு எதிராக வாக்களிக்கத் தயாராக இருந்தனர் என்ற தகவல் தற்சமயம் கசிந்துள்ளது.

இந்த ஒன்பது பேரில் நால்வர் வரவு - செலவுத் திட்டத்தின்போது அரசைத் தோற்கடிக்க வேண்டும் என்று விரும்பினர் என்றும் -

மற்றைய ஐவரும் வேறு ஒரு சந்தர்ப்பத்தில், அரசைத் தோற்கடிக்க வேண்டும் என்று கருதியதாகவும் -

தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ-3)


நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்
மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்,
வில்லுத்தகடு, பற்றரி, ரேடியேற்றர், சைலன்சர்
அனைத்தையும் நிதான விலையில் பெற்றிட



## சதாஸ் மோட்டோர்ஸ் அன் ஹாட்வெயர்ஸ்

இல.56/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
DIAL/ FAX :021-2522
(C/16296)



மானிநகர் உறை மருதடி விநாயகனே !
உமதருள் வேண்டும் அடியார் நாயகனே!
வினைகளெல்லாம் களையும் மூத்தோனே!
சோதனைகள் போதுமய்யா, அமைதியைத் தாருமய்யா!
*என இச்சித்திரைப்புத்தாண்டு தினத்தில் ரதமேறிப்*
*பவனிவரும் மானிப்பாய் மருதடி விநாயகனை இறைஞ்சி நிற்கும்.*

## சுந்தர்சன் ஸ்தாபனத்தினரும் ஊழியர்களும்

மத்திய சந்தை முன்பாக, மானிப்பாய்.

மின்சார உபகரணங்கள், மின் நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்அலங்காரப் பொருள்கள், மின்சார சோடனைப் பொருள்கள், மின் அழுத்திகள், பலரக மின்குமிழ்கள், மின் விசிறிகள், சமையலறை மின் உபகரணங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், பரிசுப் பொருள்கள், சுவர் மணிக்கூடுகள், பி.வீ.சி. பைப் வகைகள், இணைப்புகள் இன்னும் பல பொருள்களை

நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரேஸ்தாபனம்:-

## சுந்தர்சன்

மத்திய சந்தை முன்பாக, பிரதான வீதி, மானிப்பாய்.
Fax: 2751 (C/16246) *தொலைபேசி: 2751*



## அரைக்கும் ஆலை பெயர் மாற்றம்

எம் இனிய வாடிக்கையாளருக்கு.....
கல்வியங்காட்டில்
இதுவரை காலமும்
**விநாயகர் அரைக்கும் ஆலை** எனும் பெயரில் இயங்கிவந்த நமது ஆலை இன்று முதல் எமது தந்தையாரின் பெயரில்
**ஏகாம்பரம் அரைக்கும் ஆலை** எனப் பெயர் மாற்றம் செய்துள்ளோம் என்பதை -
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு
உளங்கனிந்த இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## ஏகாம்பரம் அரைக்கும் ஆலை

நல்லூர் சந்தை முன்பாக, கல்வியங்காடு
(C/16316)



பேராலயத்தில் இடம்பெறவுள்ள

## உயிர்ப்பு விழாத் திருப்பலிகள்:

புனித சனிக்கிழமை இரவு 11.00 மணிக்கு திருவிழிப்புப் பூசை ஒப்புக் கொடுக்கப்படும். ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு முதல் திருப்பலியும், 6.30மணிக்கு ஆயர் தலைமையில் இரண்டாம் திருப்பலியும், 8.15 மணிக்கு மூன்றாந் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். மாலைத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படமாட்டாது.

(86648) -பங்குத்தந்தை



## வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் சித்திரைப்புத்தாண்டில் சாந்தியும், சமாதானமும் அமைதியும் நிலவ

*வாழ்த்துகிறோம்*

நங்கையர் விரும்பும் 22 கரட் தங்க நகைகளுக்கும் சிங்கப்பூர் நகைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்



## சாரங்கா நகைமாடம்



177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

கிளை ஸ்தாபனம்: **சாரங்கன் நகை மாடம் அன் சென்ரர்**
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/16315)

தலைமையகம்: **அருள் முருகன் நகையகம்**
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# யுத்த நிறுத்தத்தை புலிகள் நீடிக்கும் வாய்ப்பில்லையாம்

## இராணுவ விமர்சகர் கருத்து

கொழும்பு,ஏப்.14

விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாகக் கடைப்பிடித்துவரும் யுத்த நிறுத்தத்தை எதிர்வரும் 24 ஆம் திகதிக்குப்பின் நான்காவது தடவை யாகவும் நீடிக்க வாய்ப்பு இல்லை என்று கொழும்பு பாதுகாப்புத் துறை விமர்சகர் இக்பால் அத்தாஸ் தெரி வித்துள்ளார்.

நாளை வெளியாகவுள்ள 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழில் கள நிலைவரம் தொடர்பாக அவர் வரைந் துள்ள வாராந்தப் பத்தியிலேயே இத் தகவலை அவர் வெளியிட்டிருக்கி றார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி காலா வதியாக உள்ள புலிகளின் யுத்த நிறுத்தம் நீடிக்கப்பட வாய்ப்பு இல்லை என்றும் -

புதிதாக அறிவித்துள்ள இரு நிபந் தனைகளையும் புலிகள் விட்டுக் கொடுக்கும் சாத்தியம் இல்லை என் றும் - அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

கடந்த வருடம் ஈஸ்டர் ஞாயிறு வேளையில் புலிகளிடம் இழந்த ஆனையிறவுப் படைத்தளத்தை கைப பற்ற படையினர் தயாராகி வருகின் றனர் என்றும் -

அதேபோன்று விடுதலைப் புலிக ளும் பெரும் தாக்குதல்களுக்குத் தயாராகி வருவதாகவும் -

எந்த நேரத்திலும் இரு தரப்புக்க ளுக்குமிடையில் மோதல் வெடிக்க லாம் என்றும் - 'சண்டே லீடர்' பத்தி ரிகை தெரிவித்துள்ளது.

(ஐ-3)

# சஞ்சிகையின் பிரதிகள் நேற்றும் தீக்கிரை

யாழ்ப்பாணம்,ஏப்.14

கொழும்பில் இருந்து வெளியா கும் தமிழ் மாத சஞ்சிகை ஒன்றின் பிரதிகள் நேற்று இரண்டாவது நாளாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

யாழ்.காங்கேசன்துறை வீதியில் சத்திரத்துச் சந்திக்குச் சமீபமாகக் கூடிய மாணவர்கள் சஞ்சிகைப் பிரதி களைத் தீயிட்டு எரித்தனர்.

தமிழ் மக்களின் உணர்வுகளுககு எதிராகவும், போராட்டத்தைக் கொச் சைப்படுத்தும் விதத்திலும் கட்டுரை கள், படங்கள் அந்தச் சஞ்சிகையில் வெளிவந்ததாகத் தெரிவித்தே அவை தீயிட்டு கொளுத்தப்பட்டன.

இந்தச் சஞ்சிகை 'லேக்ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்தின் வெளியீ டாகும். (ஐ-10)

# இருதரப்புகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைப்பிடித்து வருகிறது. அரசின் யுத்தநிறுத்தம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலையுடன் முடிவடைய இருக்கிறது.

இந்தக் கட்டத்தில் யுத்தநிறுத் தத்தை மேலும் நீடிப்பதற்காக நோர் வேப் பிரதிநிதிகள் இரு தரப்புகளு டனும் பேச்சுக்களில் இறங்கியிருப் பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசின் யுத்தநிறுத்த காலம் முடிவடைவதற்கு முன்பாக - பெரும்பாலும் நாளைமறு தினம் நோர்வேத் தூதர் வன்னி செல்ல இருப்பதாக லண்டன செய்தி ஊட கம் ஒன்று செய்தி வெளியிட்டது.

நோர்வேத் தூதர் மீண்டும் வன்னி செல்வார் என்பதைக் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரக வட்டாரங் களும் ஊர்ஜிதம் செய்ததாக மற் றொரு தகவல் தெரிவித்தது.

புலிகள் யுத்தநிறுத்தத்தை நீடிப்ப தற்கு வாய்ப்பில்லை என்று எதிர் பார்க்கப்படும் சூழ்நிலையில் நோர் வேத் தூதரின் அடுத்த வன்னி விஜ யம் முக்கியத்துவம் பெறுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

அரசு தனது யுத்தநிறுத்தத்தை நீடிக்குமா என்பது தூதரின் வன்னி விஜயத்தை அடுத்துத் தெரியவரலாம் என்றும் சில வட்டாரங்கள் கூறின.

நோர்வேயினால் பரிந்துரைக்கப் பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஆவணத்தில் அரசு தனது வசதிக் கேற்ப செய்துகொண்ட சில மாற்றங் கள் குறித்துப் புலிகள் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் -

தூதர் வெஸ்பேர்க் வன்னி செல் லும்போது விடுதலைப் புலிகள் பிரதி நிதிகளுடன் இது குறித்து ஆராய்வார் என்றும் தெரியவந்தது. (ஐ-3-5)

# பி.பி.ஸி. உலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது.

பி.பி.ஸி. சர்வதேச தொலைக் காட்சி சேவையை கொழும்பில் அஞ் சல் செய்யும் உரிமைபெற்ற எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனம் 'ஏசியா ருடே' செய்தியில் 'உதயன்' விவர ணத் தொகுப்புப் பற்றிய தலைப்புச் செய்தியை மட்டும் ஒளிபரப்பியது. விவரமான செய்தியின்போது 'உதயன்' பற்றிய விவரணத் தொகுப்பை ஒளி பரப்புவதை அது தவிர்த்துக் கொண் டது.

பி.பி.ஸியின் கொழும்புச் செய்தி யாளர் திருமதி பிரான்ஸிஸ் ஹரிசன் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜ யம் செய்த சமயம் இந்த விவரணத் தொகுப்பை தயாரித்திருந்தார்.

'உதயன்' பத்திரிகை எதிர்நோக் கும் நெருக்கடிகள், அச்சுப்பதிப்பில் கையாளப்படும் பழைய அச்சு முறை கள், விநியோக முறைகள் என்பன அந்தத் தொகுப்பில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

ஆசிரியர்பீட நிர்வாகிகள், பத்தி ரிகை விநியோக முகவர்கள், பொது மக்கள் பிரதிநிதிகள் அளித்த பேட் டிகளும் அந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

"கடந்த இரு தசாப்தங்களாக இராணுவத் தாக்குதல்கள், குண்டு வீச்சுக்கள், யுத்த நெருக்குதல்கள், இடம்பெயர்வுகள் என இந்தப் பத்திரி கையின் அனுபவங்களும் வரலாறும் தான் இப் பிரதேச மக்களின் வரலா றும் அனுபவங்களும் ஆகும்.

"இத்தகைய இடர்களுக்கு மத்தி யிலும் இப்பத்திரிகை தாக்குப் பிடிப் பதற்கு நியாயமான, உண்மையான செய்திகளை எத்தகைய அச்சுறுத்த லுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் வெளியிட வேண்டும் என்ற அவாவு டன் செயற்படும் பத்திரிகையாளர் களே காரணம்.

"பி.பி.ஸி. செய்தியாளர் நிமலரா ஜன் படுகொலை செய்யப்பட்டு ஆறு மாதங்கள் ஆகியுள்ள நிலையிலும், இன்னும் தமிழ் ஊடகவியலாளர் கள் சந்தேகக் கண்கொண்டு பார்க் கப்படும் நிலையே நீடிக்கிறது."

இப்படி பி.பி.ஸி. தனது விவரணத் தொகுப்பில் தெரிவித்துள்ளது.

(ஐ-3)


மலரும் சித்திரைப் புது வருடத்தில் ...............

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன், யாழ். நகரின் முன்னணி இசைக்கலைஞர்களும் பல்கலைக்கழக முன்னணிப் பாடகர்களும்

இணைந்து வழங்கும்

"கலைக்குயில் கானங்கள்"

புதுவருட இசைத்தென்றல்.

இடம்:- கைலாசபதி கலையரங்கு
காலம்:- 14-04-2001 சனிக்கிழமை
நேரம் :- காலை 10.30, மாலை 2.30
கட்டணம் - 50.00/=

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

விளம்பர அனுசரணை:

ராசி சில்க்ஸ்

70,71A நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(C/16317)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பாரதி நிறுவனத்தினர் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றனர்

பாரதி வீடியோ & ஓடியோ றெக்கோடிங் சென்றர்



தரமான முறையில் வீடியோ றெக்கோடிங் செய்திடவும், CD யில் இருந்து பதிவு செய்யப்பட்ட வீடியோ பிரதிகளை (தமிழ், ஆங்கிலம்) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும்



உங்கள் எண்ணங்களுக்கு ஏற்ற வகையில் தரமான முறையில் ஓடியோ றெக்கோடிங் செய்திடவும்



போட்டோஸ்ரட், லெமனேற்றிங் தரமாகவும் மலிவாகவும் பெற்றிடவும்

பாரதி வீடியோ & ஓடியோ றெக்கோடிங் சென்றர்

குறிப்பு:-

எம்மிடம் கர்நாடக இசை ஆர்வலர்களுக்கு உகந்த ஈழத்து கர்நாடக இசை வித்துவான்கள் உட்பட உலகின் பிரபல்யமான கர்நாடக இசைவித்துவான்களின் இசைக்கச்சேரிகளை ஓடியோ மூலம் ஒலிப்பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

பாரதி வீடியோ & ஓடியோ றெக்கோடிங் சென்றர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.



IIS இன் இதயங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

எம் இனத்தின் துன்பங்கள், துயரங்கள் நீங்கி இப்புத்தாண்டில் ஒளிமயமான வாழ்வுமலர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மாணவர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இயக்குநர்,
விரிவுரையாளர்கள்,
ஊழியர்கள்.

(C/16311)





மங்களகரமான திறப்பு விழா



அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் சித்திரை மாதம் 15ஆம் திகதி நாளை (15.04.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணி முதல் 9.30 மணிவரையுள்ள சுப வேளையில்

பாலன்ஸ் மல்ரி சென்ரர்

எனும் ஸ்தாபனத்தை 71, கண்டி வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தில் (பழைய மாக்கற்றிங் டிப்பாட்மென்ற்) திறந்து நடத்த குழந்தை யேசு அருள் பாலித்துள்ளமையால் அத்தருணம் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:-
திரு.திருமதி ஜெயபாலன்

எமது பாலன்ஸ் மல்ரி சென்ரரின் 24 மணி நேர சிறந்த சேவைகளாக

Computer Services

Internet E - Mail Type Setting Recording Spot

பழைய, புதிய பாடல்களை தரமாக CD யில் இருந்து CD க்கும், CD யில் இருந்து கசெற்றுக்கும் பதிவு செய்து தரப்படும்.

Communication Center

Telephone

உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புக்களை குறைந்த கட்டணத்தில் எமக்கூடாகப் பெற்றுக் கொள்ளலாம்

Fax Photo Copy Laminating

இன்றே நாடுங்கள்

பாலன்ஸ் மல்ரி சென்ரர்

T.P-021-3248 FAX - 021 - 3248 E-MAIL. PALANS@yahoo.com

(C/16288)


# மரண அறிவித்தல்

## கந்தப்பர் தம்பையா

புலோலி தெற்கு புற்றளையைச் சேர்ந்த கந்தப்பர் தம்பையா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி இலட்சுமிப்பிள்ளை, வீரகத்தி,தில்லையம்பலம்(லண்டன்), வைரவப்பிள்ளை (ஓய்வுபெற்ற நில் அளவை அத்தியட்சகர்), திருமதி சினனம்மா ஆறுமுகம்(கொழும்பு), திருமதி தங்கம் தங்கராசா, கந்தசாமி (கனடா), பாலகிட்டிணபிள்ளை(நிதி உதவியாளர், பிரதேச செயலகம் - பளை), பரமநாதன்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14-04-2001)பி.ப. 3.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
த.பாலகிட்டிணபிள்ளை
(மகன்)


(C/16318)

இப்பத்திரிகை நியூ, உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# உதயன் - புத்தாண்டுச் சிறப்பிதழ் - விஷு வருடம்

## நாடு நலன்மிக்கதான நிலையைப் பெறுவதற்கு இறைவனை அனைவரும் பிரார்த்தியுங்கள்!

பூமியில் வாழும் ஆண்,பெண்களின் செயற்பாடுகளிலேயே அப்பூமியில் வாழ்வோரின் கலாசாரமும் பண்பும், பூதத்துவ அமைவும் மேன்மையாக வளர்கின்றன. இதற்கு நாள்தோறும் நடைபெறும் பண்டிகைகள் துணைபோகின்றன. கலாசாரங்க



ளின் துணையிற்தான் கிரேக்கம் அழகுக்கும், ரோமர்கள் சட்டத்திற்கும், ஆங்கிலேயர் நீதிக்கும், போர்த்துக்கேய டச்சு வாசிகள் மிலேச்சத்திற்கும் ஆதரவு தந்து அதன் வழிகண்ட சுதந்திரத்தையே ஜீவாதாரமாகவும் கருதினர்.

இந்துக்கள் தமது பண்பாட்டில் தர்மச் செயல்களையே ஜீவாதாரமாகக் கொண்டனர். இதனால் இரக்க சுபாவம், சகோதர வாஞ்சை, கடவுள் வழிபாடு என்பனவற்றைத் துணையாகக் கொண்டு, பண்டிகைகள் மூலம் ஆன்மீகத்திற்கும் உரமிட்டனர். ஆன்மீக முன்னேற்றம் அவன் வாழ்க்கையில் அனுசரிக்கும் மதக் கொள்கையைச் சார்ந்து வளர்ந்து வந்தது.

சைவம் மனிதனைத் தன் உள்ளத்துக்குள்ளேயும் இருப்பவனுமான இறைவனை வழிபடுவதோடும் அதே இறைவன் உருவமற்றவராகவும், பல ரூபங்கள் மூலமாகவும் பண்டிகைகள் மூலம் வழிபட ஏராளமான கிரியைகளைத் தந்து நிற்கிறது. விரதங்கள் மூலமாகவும் உற்சவங்கள் மூலமாகவும் இறைவனது அருளாசிகளுக்கும் மனிதன் ஆளாகின்றான். இவற்றைச் சார்ந்த கருத்துக்களைக் கொண்டே புரட்சிக் கவி பாரதியார்–

*"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி*
*இருந்ததும் இந்நாடே*
*அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணம்*
*வளர்ந்து செழித்ததும் இந்நாடே"*

எனப் புகழ்ந்து பாடினார்.

பண்டிகைகளைச் சார்ந்த சித்திரை வருஷப்பிறப்பு பண்டிகை சைவர்களது மகத்தான பண்டிகையாகும். மனித உடலுக்கும் மனதுக்கும் உற்சாகமூட்டும் வசந்த காலமும் இதுவே. மேடராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலமாகும். மருத்துநீரால் முழுகி, மாதா பிதா குரு தெய்வம் என்ற மகேஸ்வர மூர்த்திகளை வழிபட்டு, எதிர்காலம் நல்ல சுபீட்சமாக அமையப் பிரார்த்தனைகளை ஆரம்பிக்கும் நன்னாளாக வருடப் பிறப்பு அமைகிறது. சைவத் தமிழ் வருடங்களை கணக்கெடுத்து அது எவ்வகையில் அமைய வேண்டுமென "ரிஷ்யசிருங்கர்" காலத்திலேயே வகுக்கப்பட்டு, பின் "கர்க்க மஹரிஷியால்" விரிவு கொண்டு, ஈற்றில் இடைக்காடார் முனிவர் எமக்கு அதனை அறியத் தந்துள்ளார்.

ஆங்கில எண்கணிதப் பேரறிஞராகிய "கீரோ" என்பவர் எண்கணித முறையை கீழைத்தேய அந்தணர்கள் மூலமாகவே அறிந்து கொண்டதாகவும், சூரியனையும் பூமியையும் சம்பந்தப்படுத்திய வருடங்களது சுழற்சியையும், கிரகங்களது சுற்றோட்டத்தின் முறையையும் இவற்றின் மூலம் கண்ட சோதிட அறிவையும் அறிந்து தெளிந்ததாகவும் புகழ்ந்துள்ளார்.

எனவே சைவமரபும், சைவக் கலாசாரமும், பண்பாடும் ஆதியிலிருந்தே பண்டிகைகள் மூலமாகப் பரம்பியதென்பது உண்மையேயாகும்.

**மஹாராஜஸ்ரீ**
**சு.து.ஷண்முகநாதக் குருக்கள்**
*மாவை ஆதீனகர்த்தா*

அவ்வாறு பரவி தொடர்ந்துள்ளதனால் தான், பறங்கியரும் ஒல்லாந்தரும் சைவ மரபுகளை அடியோடு சாய்த்துவிட எடுத்த முயற்சிகள் படுதோல்வி கண்டு பறங்கியர்கள் சிவபூமியிலிருந்து துரத்தியடிக்கப்படவும் உதவிற்று. ஒவ்வொரு வருட பலன்களையும் பஞ்சாங்கங்கள் மூலம் சைவர்கள் அறிந்து அதற்கேற்றவாறு நடைமுறைத்திட்டங்களை வகுத்து இன்றும் செயற்படுத்தி வருவது கண்கூடு.

இதன்படி இடைக்காட முனிவர் இவ்வருட விஷு வருஷ பலனை அறியத்தரும் போது–

*"பாரில் விஷு வருடம் பாலர்க்குப்*
*பீடையுண்டாம்*
*கார்பொழிவ தில்லை முற்காலத்தில் –*
*ஏரி*
*பெருகாது, பிற்காலம் பெய்யுமே மாரி*
*இருகால மும் சமெனன் றறி"*

எனப் பாடியுள்ளார். பஞ்சாங்கங்களும் இடைக்காடர் வழியையே பின்பற்றி கணித்துப் பலன் அமைக்கிறார்கள்.

இவ்வருட விஷு வருஷம் தனுலக்கினத்தில் பிறக்கிறது. விஷு வருஷம் மக்களனைவருக்கும் நற்செய்திகளையும், நல்லனவற்றையும் நல்கி நாடு நலன் மிக்கதான நிலையைப் பெற வேண்டுமென சைவர்கள் அனைவரும் நம்மிறைவனை நினைந்து பிரார்த்திப்பதே முதற்கடமையாக அமையவேண்டும். அதற்காக அனைவருக்கும் பார்வதிபரமேஸ்வரனது அருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து யாபேரையும் இந்நன்னாளில் 'உதயன்' மூலம் ஆசீர்வதிக்கின்றேன். ★

## சித்திரை சிரிப்பளா?

| | | |
|---|---|---|
| இத்தரைத் | தமிழர் | |
| | எப்படிப் | புதிய |
| சித்திரை | வரவில் | |
| | செழிக்கப் | போகிறார்? |
| உத்தரிப் | பெல்லாம் | |
| | ஓய்ந்து | போகுமா? |
| சித்தம் | களிப்புறும் | |
| | செய்திகள் | கிட்டுமா? |
| புத்தம் | புதியதோர் | |
| | போர்க்குணம் | பொங்குமா? |
| நித்திரை | இன்றியே | |
| | நிம்மதி | கலையுமா? |
| நாட்டில் | சாந்தியும் | |
| | நட்பும் | நிலவுமா? |
| கூட்டாய் | அமைதிக் | |
| | குணம்கோல் | ஓச்சுமா? |
| சித்திரை | சிரிப்பளா? | |
| | செழிப்பினைச் | சேர்ப்பளா? |
| முத்திரை | பதிக்குநல் | |
| | முறைமை | தருவளா? |
| அசட்டுச் | சிரிப்பும் | |
| | ஆணவச் | சிரிப்பும் |
| புரட்டுச் | சிரிப்பும் | |
| | போய்ப்புன் | முறுவல் |
| பூக்து | உவகையால் | |
| | பூரிப்(பு) | அடைவளா? |
| காத்து | அவள்முகக் | |
| | கனிவைக் | காணவே |
| பார்த்து | நிற்கிறோம்! | |
| | பரவசத் | தோடுநாம்! |
| ஆர்க்கும் | தமிழர்தம் | |
| | அவலம் | தீர்கவே! |

*நயினைக் கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை*

## உரிமை கொண்டு சித்திரையே வருக!

நால் திக்கும் பிரிந்தவரை சேர்த்து வைக்க சித்திரையே வருக
நல்ல பேச்சை தொடக்கி வைக்க சித்திரையே வருக
நீளும் துயரை நிறுத்தி வைக்க சித்திரையே வருக
நிரந்தர தீர்வை தந்து காக்க சித்திரையே வருக
ஆளும் உரிமை தமிழர் பெறவே சித்திரையே வருக
ஆண்டாண்டாய் அநுபவிக்கும் துன்பம் தீர்க்க சித்திரையே வருக
சூழும் அமைதி பெருக்கி வைக்க சித்திரையே வருக
சுதந்திர வாழ்வு மலரும் ஆண்டாய் சித்திரையே வருக!

*- மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்.*

## ஆதீன முதல்வரின் அருளாசி

விஷு வருடம் பிறந்துவிட்டது.

இன்று பிறந்திருக்கும் புத்தாண்டில் மக்கள் எல்லோரும் நல்ல சுகமாகவும் சுபீட்சமாகவும் வாழ வேண்டும்; அமைதியும் சமாதானமும் மலரவேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும். நேற்றுடன் நிறைவுபெற்ற விக்கிரம ஆண்டில் நிகழ்ந்த நல்லனவற்றையெல்லாம் மனதார வாழ்த்தி, தீயனவற்றையெல்லாம் நெஞ்சைவிட்டு நீக்கிவிடுவோம். விஷு வருடத்தை வரவேற்போம்.

என்றும் எந்நேரமும் எப்போதும் எந்நாளும் நல்லதையே செய்து, நல்லவற்றையே நினைத்து மற்றவர்களுக்கும் நன்மையையே புரிந்து நன்றாக வாழ்வோம் என்று நாம் அனைவரும் பிரதிக்ஞை எடுத்துக் கொள்வோம். இற்றை நாள் வரை எமக்கு வந்த துன்ப துயரமெல்லாம் கால கஷ்டங்களெல்லாம் 'சூரியனைக் கண்ட பனிபோல' விலகியோட வேண்டும். வாழ்வில் சந்தோஷமும், மகிழ்ச்சியும் மலரவேண்டும்.

இப்புத்தாண்டு முதலாக இப்புண்ணிய பூமியில், இன்பம் பூத்துக், குலுங்கிப் பொலிவுற, நாற்றிசையும் தெய்வீக அருளால் திருவருள் செறிந்து மக்கள் வாழ, வளம் பெருக, மழை பொழிந்து பசுவினம் சிறக்க, சிவசின்னங்கள் துலங்க தூய வாழ்வு வாழ வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாத கமலங்களைப் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம். இந்த விஷு வருடம் முதலாக எல்லோரும் இன்புற்றிருக்க, அவனருளாலே அவன் தாள் வணங்கி வாழ்த்தி அமைகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
*இரண்டாவது குருமஹா சந்நிதானம்,*
*நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்.*

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் புத்தாண்டு வாழ்த்து

இருபத்தோராம் நூற்றாண்டில் மலர்ந்து வரும் புத்தாண்டே வருக! வருக! எமது திருநாட்டிலே சாந்தியையும் சமாதானத்தையும் வழங்கி இந் நாட்டில் வாழும் அனைத்து மக்களும் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் இறையன்புடனும் வாழ விஷு வருஷம் வழிவகுக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

**கா.சந்திரசேகரசர்மா,**
*பொதுச் செயலாளர்,*
*சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.*

## சிவத்தமிழ்ச் செல்வி வாழ்த்து

எங்கள் வாழ்வில் சமய நிகழ்வுகளைப் பயபக்தியோடு வாழ்த்தவேண்டியுள்ளது. கோயில்களும் அங்கு எழுந்தருளி அருள் வழங்கும் தெய்வத் திருவுருவங்களும் எம்மை வாழ்விப்பன. புத்தாண்டு தினத்தில் இந்த நினைவு சிறப்பாக அமைய வேண்டும்.

*"ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே*
*சூழ்க வையகமுந்துயர் தீர்கவே"*

என்பது எமது உள்ளத்தில் என்றும் நின்று ஒலிக்கட்டும்.

புதுவருடமான விஷு வருடம் அனைவர்க்கும் நன்றாக அமையட்டும். நீதியும் உண்மையும் நிலைக்கட்டும். அமைதி ஓங்கட்டும் என்று வாழ்த்தி அமைகின்றேன்.

**கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.**

## சமூக, ஒழுக்கக் கேடுகள் மத்தியில் மலரும் புத்தாண்டு; வனப்பினை இழந்த நிலையில் வண்ணமார் தமிழ்த்தாய்!

*ஈழ மணித் திரு நாடெங்கள் நாடு*
*ஈடி ணையற்ற தென ஆடி நீ பாடு*
*ஆழமான பண்பாட்டினைப் பெற்ற நாம்*
*அனைத்தையும் இழந்தின்று*
*அனாதைகளானோம்*
*வாழத் துடித்திடும் வண்ணத் தமிழரே*
*வாழ்ந்த நம் வாழ்வினை*
*எண்ணியே பாரீர்*
*மீளவும் நம்மினம் வாழ்ந்திட வேண்டில்*
*மேன்மைக் கலைகளை பேணிட வாரீர்.*

ஆண்டாண்டு காலமாக ஈழத் தமிழர் நாம் அன்னை தமிழினை அகமகிழ்ந்தேற்றினோம். எங்கள் வளமும் எங்கள் வாழ்வும் என்றென்றும் இம் மண்ணில் நின்று நிலவிடும். எங்கள் கலையும் எம்மவர்

### தமிழரின் தனியான பண்பு என்று நாளை எதனைப் பேசப்போகிறோம்?

வாழ்வும் நம்மவர் மண்ணில் நலிந்திடாதென, மார்பினைத் தட்டி, முழக்கமும் முழங்கினோம். அன்னியர் பற்பலர் இன்பத் தமிழரெம் எழில்தனைக் கண்டிட பண்டைத் தமிழர் பண்பாட்டினை பார்த்திட வந்தனர்; கண்டனர்; வியந்தே சென்றனர். பண்பாட்டின் சின்னமாக, பழந்தமிழ் மரபைப் பேணி, அன்னையின் எழிலைப் பேணி அக மகிழ்வெய்துகின்றோம். தென்னகத்து அறிஞர்களும், மேல் நாட்டு ஆய்வாளரும், ஒரே குரலில் நன்றிது; நல்ல பண்பு, நானிலம் வியக்குமென்று பண்பட்ட தமிழர் வாழ்வை பாரிலை புகழ்ந்து நின்றார்.

ஆனால் வண்ணமார் தமிழ்த்தாய் இன்று தனது வனப்பினை இழந்து விட்டாள். என்றுமே கண்டிராத இழிநிலை எய்தலானாள்.

சரித்திரத்தின் சாபக்கேடு என்னவெனில், அக்கால கட்டத்தில் வாழும் மக்கள், தம் அறிவிலுக்கெட்டாததாக, உணர்வினில் உணராதவர்களாக மெள்ளவே ஏற்படும் மாற்றத்தால் மெதுவாகவே, தம் பழம்பெரும் பண்பாட்டை, கலையை, கலாசாரத்தை, வாழ்க்கை முறையை ஒன்றின் பின் ஒன்றாக, ஓயாது தொலைத்துவிடுகின்றனர். எம் பண்பாடு தொலைகின்றது என உன்னிப்பாய் உணர முன்னர் எல்லாமே பொய்யாய், பழங்கதையாய், புழுகாய், புனைகதையாய் மறைந்து விடுகின்றது. இந்நிலை நம்மவர்க்கு மட்டும் சொந்தமானதல்ல. பல்வேறு சாம்ராச்சியங்களும் பேரரசுகளும், தத்தமது தனித்துவத்தை இழந்துவிட்டதை வரலாற்றுப் பக்கங்கள் கோடிட்டு காட்டுகின்றன.

### அதிகரிக்கும் கொடுமைகள்

முதுமையின் பிடியில் சிக்கி, பொலிவுன்றி நடை இழந்து தவிக்கும் பாட்டி, தான் பல்லாண்டுகளுக்கு முன்னர் இளமை மிடுக்கோடு, பூப்புனித நீராடி, பூமாலை சூடி பொலிவு பெற்று நின்ற புகைப்படத்தை பார்த்து விட்டு, ஏக்கப் பெருமூச்சு விட்டு ஏதையாய் நிற்பதுபோன்று, நாமும் கலையை, பண்பாட்டை, வாழ்க்கை முறையை, வனப்பை எல்லாம் இழந்த பின், ஆண்டுகள் பல கழிந்த பின் ஆவேசமாக பேசித் திரிவதில் பலனொன்றுமில்லை.

அன்னைத் தமிழை அரியணையில் ஏற்றி வைத்து, பண்ணுடன் இசையும், கூத்தும், பலவகைப் பரதம் ஆடி, நள்ளிரவு தாண்டினாலும் நாதஸ்வரக் கச்சேரி கேட்டு, நாடக, நாட்டியங்கள் நயம்பெற நடத்திய மண்ணில், இன்று கலையில்லா வாழ்வு, நிலவில்லா வானமாக, நீரில்லா ஓடையாக, மலரில்லா பூங்காவாக, மணமற்ற மலராகி மகிமைதனை இழந்து நிற்கின்றது.

மறுபுறத்தே மாதரசிகள் தம் இருபத்திரண்டாம் ஆண்டை கொண்டாட முன்பே கையில் குழந்தையோடு, "கோடேறி" தாபரிப்புக் கோரும் காட்சியினைக் காண்கிறோம். பற்பல இளம் தாய்மார்கள் தம் கணவனால் கைவிடப்பட்டுக் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கின்றனர். இன்னும் எத்தனையோ பெண்கள் விவாகரத்துக் கோரி, கூடிவாழமுடியாத குறையினை பகிரங்கமன்றில் பகர்ந்து நிற்கின்றனர். இக்கொடுமைகள் மாதாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளன.

நேற்று என் கதவைத் தட்டிய, உணர்வுமிக்க பல்கலைக்கழக மாணவத் தம்பியர், வரைபடம் கீறி, பல்கலைக்கழக சுற்றாடலில் ஒன்பது இடத்தில் கசிப்பெனும் கொடிய பானம் விற்பனையாவதை விசனத்துடன் கூறிநின்றார். நாடெல்லாம், ஏன் வீடுகள் பலவற்றிலும் இந்தத் திராவகம் குடிசைக் கைத்தொழிலாக காய்ச்சப்படுவதைக் காண முடிகின்றது.

இப்படியாக பல்கிப் பெருகும் மதுவும் அதனால் விளையும் ஒழுக்கக்கேடும், எம்மினத்தை மீளாத் துன்பத்தில் ஆழ்த்தி விடுகின்றன. யாழ்.நீதிமன்றில் மாதரசிகளே வரிசையாக நின்று கசிப்பெனும் திராவகத்தை விற்ற குற்றத்தை ஏற்று தெண்டம் கட்டும் காட்சி, நாடு என்ன நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது என்பதை சரியையாகச் சொல்கிறது.

தமிழருக்கென தனியான பண்பு உண்டு என்று நேற்று வரை பேசிய நாம், நாளை என்ன பேசப் போகிறோம்?. தமிழினத்தை அழித்தொழிக்க, வேண்டுமெனில் எம் அடிநாதமான தமிழ் வாழ்வை, தமிழர் தம் பண்பாட்டை உருக்குலைத்துவிட்டால் போதுமானதே.

**மு.திருநாவுக்கரசு**
*ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி*

இத்தகைய பாரிய சீர்கேடுகள் மத்தியில் இந்தப் புத்தாண்டு மலர்கின்றது. இச் சீர்கேடுகளை சட்டத்தால் மட்டும் சரி செய்து விட முடியாது. *'திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாதென்ற'* பட்டுக்கோட்டையாரின் பாடலை நினைவு கொண்டு செயற்படுவோம். ஒருபுறம் கலாசாரச் சீரழிவு; மறுபுறத்தே பண்பாட்டுப் பேரழிவு. தாய்க்குலம் இழிவு பெற்று அழியுமானால் நம் நாட்டை இனிக் காப்பவர்தான் யாரோ?. ★

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ் - விஷு வருடம்


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சிவா ரெக்ஸ்ரைல்ஸ்

இல. 27,பெரியகடை, யாழ்ப்பாணம்.
கிளை:- பிரதான வீதி, சித்தன்கேணி.
(C/16222)

நலம் காணும் நன்னாளாம் இந்நாளில்
எங்கள் இதயம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

சுனில் ஆட்ஸ்

* எம்மிடம் M.P.3 CD க்கள் விற்பனைக்குண்டு
* புதிய, பழைய பாடல்கள் CDயில் இருந்து CDக்கும் ஓடியோ கசட்டில் இருந்து CDக்கும் பதிவு செய்து தரப்படும்.
* Photo Chorome Senkada, Master Colour வர்ண அச்சுச் சேவை

இல. 272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி16274)

இனித்திடும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!
நங்கையர் விரும்பும்,

- புடவைத் தினுசுகள்.......
- கூறைச் சேலை வகைகள்......
- சேட்டிங்- சூட்டிங்
- சிறுவர் வண்ண ஆடைகள் ஆகியவற்றிற்கு

எண்ணத் தெரிவுகளின் வண்ணக் கலைக் கூடம்



நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

23(58) பெரிய கடை, யாழ்ப்பாணம், T.P: 3356
(சி16200)

எமது அன்புக்கினிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்



நாளைய நாகரீகத்தினை இன்றே அறிமுகம் செய்து வைப்பதில் தனக்கென ஒரு தனி இடம் வகிப்பவர்கள்

CITY TAILORS

(Specialist For Wedding Coat & Suit)

புடைவைத் தினுசுகள் அனைத்தையும்!
தரம்! மலிவு!! அமோக தெரிவிற்கு!!!
அன்றும் இன்றும் என்றும்

சிற்றி ரெக்ஸ் & ரெடிமேட்ஸ்

(புடைவைத் தினுசுகளின் ராஜ முத்திரை)

இல.73, பெரிய கடை யாழ்ப்பாணம்.

யாழ்.நகரில் தரமான தளபாடப் பொருள்களையும் (பிளாஸ்ரிக் கதிரைகள் உட்பட), மெத்தை (மற்ட்றெஸ்) வகைகளையும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்திட

MANGALA FURNITURE MART

இல.153, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி16275)



அனைவரது உள்ளத்திலும் அமைதி நிலவிட அன்பர்கள் ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.
சுகாதார முறைப்படி, நாவினிக்கும் வகையில், தரமான, சுவையான பண்டங்களைத் தயாரித்து என்றென்றும் தந்திடும்

லிங்கன் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/16270)



தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நலம் காணும் நன்னாளாம் இந்நாளில் தங்கள் இதயம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுவதில் பெருமிதம் அடைகிறார்கள்.



த. சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்



நாளுக்கு நாள் அறிமுகமாகி வரும் புடைவை வகைகளையும் இளைய தலைமுறையின் தெரிவுகளுக்கேற்ப ஆடைவகைகளையும், சின்னஞ்சிறுவர்களுக்கேற்ற ஆடைவகைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய மிகவும் நம்பகமான ஸ்தாபனம் இது!

21, MODEL MARKET, POWER HOUSE ROAD, JAFFNA.
T.P. 021-2826
TS
21, சிறப்பு அங்காடி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C/16110)

மலரும் சித்திரைப் புத்தாண்டில் மனையும் மனதும் மகிழ அமைதி திரும்பி ஆறுதலளிக்க
எம் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!

நியூ சோபிதா நகை மாடம்

தங்க நகைத் தேர்வில் தர உறுதியும் மனதைத் தொடும் கலைநயமும்
எண்ணிய நாளில் ஈடேற உங்கள் தெரிவுக்கான ஒரே இடம்



NEW SHOBITHA JEWELLERS

74/1, KASTHURIAR ROAD, JAFFNA.
74/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி16269)

உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ் - விஷு வருடம்

# யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியக்கத்தில் கூட்டுறவு உணர்வு விரவி நின்றது அன்று

**பழைய காலத்துக்கும் புதிய காலத்துக்கும் இடையில் வித்தியாசங்கள் இருக்கவே செய்யும். புதிய காலவோட்டத்தில் பழைமையை மறந்துவிடக் கூடாது. புதிய சந்ததிக்கு அதனை நினைவுபடுத்தி அந்தக் காலச் சிறப்பையும் வாழ்க்கை முறைகளையும் எடுத்துக் கூறும் எழுத்துக்களை உதயனின் சிறப்பு மலர்களில் வடித்து வருபவர் மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா**

**இங்கே அந்தக் காலத்து யாழ்ப்பாணத் தமிழர்களின் கூட்டுறவு உணர்வுடன் கூடிய வாழ்க்கையைப் படம்பிடித்துக்காட்டுகிறார் கட்டுரை வடிவில். - *ஆசிரியர்.***

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களது வாழ்வு கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் பல பெருமைகளை உடையது. அவர்களது நாளாந்த நடைமுறைகளில் நேர்மையும் ஒழுக்கமும் ஆசாரசீலங்களும் ஒற்றுமையும் முதலிடம் வகித்தது. கிராமங்கள் தோறும் முதியவர்களின் சொல்லுக்குப் பெரும் மதிப்பிருந்தது. குடும்பங்களிடையே அபிப்பிராய பேதங்கள் உருவாகுமிடத்துப் பெரியவர்கள் சுமுகமாகப் பேசி அவற்றைத் தீர்த்து விடுவார்கள். அத்தீர்ப்புக்கள் முடிந்த முடிவானவை. அவை மறு பேச்சின்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட காலம் அது எனலாம்.

அந்தக் காலத்தில் குடாநாட்டுத் திருக் கோயில்களில் மெய்யடியார்கள் கூட்டமே அங்கு திரளுவதுண்டு. வருடந்தோறும் நடைபெறும் புராண, இதிகாசப் படிப்புக்களைக் கேட்டு அவர்கள் இன்புற்றுப் பயனடைவர். மாணவர்கள் அனைவரும் தத்தம் பாடசாலைகளுக்குச் சந்தனப் பொட்டுடன் செல்வது வழமை. அவ்விதம் அவர்கள் வருவதையே ஆசிரியர்களும் ஊக்கப்படுத்தினர். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி போன்ற உயர் கல்விக் கூடங்களுக்கு எல்லாம் தூரத்துக் கிராமங்களிலிருந்து மாணவர்கள் கால் நடையாகவே சென்று கல்விகற்றனர். அவர்கள் எல்லோரும் சந்தனத் திலகம் அணிந்து கூட்டம் கூட்டமாகச் செல்வது மிகவும் ஆரோக்கியமானதோர் அந்தக் காலத்துக் காட்சியாகும்.

குடாநாட்டின் அனைத்துக் கிராமங்களிலும் மக்கள் ஆவினங்களைப் பட்டி பட்டியாக வளர்த்தனர். அவர்கள் பசுக்களை வணங்கி வாழ்ந்தனர். அவற்றுக்கு கடுகளவேனும் துன்பம் செய்ய சிந்தையில் நினைத்துக் கூடப் பார்க்கமாட்டார்கள். பசுக் குலமும் மக்களது செல்வச் செழிப்புக்கும ஆரோக்கியமான நல்வாழ்வுக்கும் கமங்களின் மேம்பாட்டுக்கும் உறுதுணையாக விளங்கின. இதை இன்று வரலாறாக நினைவுபடுத்திப் பார்க்க வேண்டி உள்ளது.

## கூட்டுக் குடும்பங்கள்

கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையையே அந்தக்கால யாழ்பாணக் கிராம மக்கள் கைக்கொண்டனர். அவர்தம் வாழ்வியலில் ஒற்றுமைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது.

டொனமூர் அரசியல் திட்டத்தை எதிர்த்து 1931ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசாங்க சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் முற்று முழுதாக பகிஷகரிப்புச் செய்தது. யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய தொகுதிகளுக்கு ஒரு குருவி கூட நியமனப் பத்திரம் தாக்கல் செய்யவில்லை. "யாழ்ப்பாணப் பகிஷ்கரிப்பு" எனப் பிரசித்திபெற்ற இப் பகிஷ்கரிப்பின் பின்னர் இத்தொகுதிகளுக்கான தேர்தல்கள் 1934 ஆம் ஆண்டில் நடைபெற்றன.

துலா மிதிப்பவர்களிற் பலர் சிறந்த பாடகர்களாகவும் இருப்பர். அத்தகையோர் தமது சிரமத்தை உணராமல் இருக்கும் பொருட்டு வள்ளி திருமணம், அரிச்சந்திரன், பவளக்கொடி இன்னோரன்ன நாடகப் பாடல்களை நாலுகட்டை சுதியில் பாடத்தொடங்குவர். அந்தப் பிராந்தியம் முழுவதும் விடிய விடிய இசையில் மிதக்கும். அக்கம் பக்கத்து தோட்டக்காரர்கள் போட்டிக்குப் பாடுவதும் பேரானந்தமாகும்.

திரு.ஜி.ஜி.பொன்னம்பலம், திரு.அருணாசலம் மகாதேவா போன்றோர் வெற்றிவாகை சூடி யாழ்ப்பாணத் தமிழர் தம் மாண்பினை வெளிப்படுத்தியது அந்தக் காலம் என்றாகி விட்டது. இன்று அப்படியொரு ஒற்றுமையான பகிஷ்கரிப்பு.........?

விவாக பந்தத்தை மரண பரியந்தம் வரை கட்டிக்காத்த பெருமைக்கும் உரியவர்களாக அன்றைய மக்கள் விளங்கினர். எவ்விடர் வரினும் கலியாண வாக்குறுதிகளை எவரும் மீறி வாழ்ந்திலர்.

## துலாவில் பாடகர்கள்

ஒருவர் பலருக்கும் பலர் ஒன்று சேர்ந்து ஒருவருக்கும் உதவிப் பல நன்மைகளைப் பெற்றுக்கொள்வது கூட்டுறவின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்று. கூட்டுறவாளர்கள் கூட்டுறவு வாழ்க்கையின் சிறப்பியல்புகளை உணர்ந்து தமது வாழ்வியலை அமைத்துக் கொண்டவர்களும் அன்றைய யாழ்ப்பாணத்து மக்களே. கமங்களில் நீர்ப்பாசனம் கூட்டுறவான முறையில் மேற்கொள்ளப்பட்டது. துலாவின் துணைகொண்டு பட்டையால் பயிர்களுக்கு நீர் பாச்சுவதற்கு அன்று ஆகக் குறைந்தது நால்வர் தேவைப்பட்டனர். துலா மிதிக்க இருவர். கிணற்று மிதியில் கட்டை பிடிக்க ஒருவர். நீரைக் கட்ட இன்னொருவர். இவர்கள் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பர்.

# எங்கும் எதிலும் கூட்டு முயற்சி; அந்தப் பழைமைகளில் புதுமையும் உண்டு!

பின்னிரவு வேளைகளிலேயே நீரிறைப்பு ஆரம்பமாகும்.

துலா மிதிப்பவர்களிற் பலர் சிறந்த பாடகர்களாகவும் இருப்பர். அத்தகையோர் தமது சிரமத்தை உணராமல் இருக்கும் பொருட்டு வள்ளி திருமணம், அரிச்சந்திரன், பவளக்கொடி இன்னோரன்ன நாடகப் பாடல்களை நாலுகட்டை சுதியில் பாடத் தொடங்குவர். அந்தப் பிராந்தியம் முழுவதும் விடிய விடிய இசையில் மிதக்கும். அக்கம் பக்கத்துத் தோட்டக்காரர்கள் போட்டிக்குப் பாடுவதும் பேரானந்தமாகும்.

கிளிநொச்சி, பரந்தன் கமங்களில் நெல் விளைவதைப் போல யாழ்ப்பாணக் கமங்கள் அனைத்திலும் தினை விளைவிக்கப்பட்ட காலத்தில் தினையை அறுவடை செய்வது, சூடு அடுக்குவது பின்னர் சூடு அடிப்பது போன்ற அனைத்துக் கருமங்களுக்கும் கூட்டுறவு முறையையே மக்கள் கைக் கொண்டனர்.

குடாநாடு முழுவதும் பனைகளால் நீக்கமற நிறைந்திருந்த அந்நாளில் மக்கள் மண் வீடுகளிலேயே வாழ்ந்தனர். வீடுகளை வேய்வதற்குப் பனை ஓலைகளே பயன்படுத்தப்பட்டன. வீடு வேயதல் நிகழ்வு பலர் ஒன்றுகூடி நடத்தப்படும். வீடு வேய்தலையும் நல்ல நாள் பெருநாளாகக் கருதி விசேட சமையல் செய்து அக்கம் பக்கத்தில் உள்ள நெருங்கிய இனசனங்களையும் அழைத்து விருந்துண்டு மகிழ்வது அந்நாள்களில் பழக்கமும் வழக்கமுமாகும்.

ஓலை வெட்டுதல், வீடு வேய்தல், வேலியடைத்தல் போன்ற கருமங்களுக்குப் பஞ்சாங்கங்களில் நாள் குறிக்கப்பட்டிருக்கும். இப்போதையப் பஞ்சாங்கங்களில் கூட அன்றைய மரபைப் பேணி வருகிறார்கள். காளை மாடுகளுக்கு நுகம் வைத்தல், அவற்றைப் பழக்குதல் முதலிய கருமங்களுக்குக் கூட அன்றைய மக்கள் பஞ்சாங்கங்களைப் பார்த்து நாள் குறிப்பது வழமை.

## திருவிழாக்கள்

கோயிற் திருவிழாக்களைக் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் மக்கள் நடத்திய விதம் தனித்தன்மையானது. ஒரு கோயிலின் வருடாந்த உற்சவத்தில் பத்துத் திருவிழாக்கள் எனில் அவை ஒவ்வொன்றுக்கும் ஆகக்குறைந்தது பதினைந்து குடும்பங்களின் பங்களிப்பாவது இருக்கும். முழுக்கிராமமே கோயிலைத் தமது தலம் போலத் தாங்கி நின்று சிறப்பிக்கும். கிராம மக்கள் அனைவரும் கோயில்களில் உழவாரத் தொண்டு செய்த பெருமைக்கும் உரியவர்கள். மக்கள் தத்தமது சொந்த பந்தங்களுக்கிடையிலேயே திருமண உறவுகளை வைத்துக் கொண்டனர்.

குடும்பங்களில் துக்க நிகழ்வுகள் ஏற்படுமிடத்து முப்பத்தொரு நாள்களுக்கு அக் குடும்பங்களை உறவினர்களே தாங்கி அரவணைத்து நிற்பார்கள். துக்கத்திலாழ்ந்திருக்கும் குடும்பத்துக்கு மூன்று வேளை உணவையும் உறவினர்களும் அயலவர்களுமே கொடுத்து உதவுவர். இன்றும் இவ்வழக்கு ஒரு சிறிய அளவிலாவது பேணப்படுவதைக் காணலாம்.

## ஒடியற்கூழ் அமிர்தம்

